நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

for young
friends of fmpb

FRIENDS MISSIONARY PRAYER BAND

இளைஞர் மாத இதழ்

# வேதக் களத்தில் சபையைக் கட்டுவோம்!

களத்தில்
2026
வீரியம்



Vol 42 - Issue 9 - September - 2026

Private circulation only

# கிறிஸ்துவின் ராஜரீக ஆசாரியத்துவம்

REV. SELVINRAJ G CHARLES



எபிரெயர் 9ஆம் அதிகாரம், நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை தற்காலிக நிழல்களிலிருந்து வெளிப்பட்ட நித்திய நிஜமாகவும், பரலோகத்தில் இணையற்ற பிரதான ஆசாரியராகவும் உயர்த்திப் போற்றுகிறது. பூமிக்குரிய கூடாரத்தையும், மிருகங்களின் பலிகளையும் கடந்து, தம்முடைய சொந்த இரத்தத்தின் மூலம் நம்மை மீட்டெடுத்த தேவ ஆட்டுக்குட்டியாம் கிறிஸ்துவை போற்றித் துதிக்கின்றோம்.

இந்த அதிகாரத்திலும், அடுத்த 10வது அதிகாரத்திலும் அப்போஸ்தலனாகிய பவுல் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நம்மை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளேயே பிரவேசிக்கச் செய்கிறார் என்று சொல்ல முடியும்.

### பரலோகக் கூடாரத்தின் பிரதான ஆசாரியர்:

- ✦ மனித கரங்களால் கட்டப்பட்ட ஸ்தலத்திற்குள் நுழையாமல் நமக்காக தேவனுடைய சமூகத்தில் தோன்றும் பொருட்டு மேன்மையானதும், பூரணமானதுமான பரலோகக் கூடாரத்திற்குள் பிரவேசித்த இயேசுவே உம்மைத் துதிக்கிறோம்.
- ✦ பூமிக்குரிய ஆசாரியர்கள் திரைக்குப் பின்னால் பயத்தோடு சென்றார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து, நம்மையும் தேவ பிரசன்னத்திற்குள் தைரியமாய்ப் பிரவேசிக்கச் செய்தார். ஆகவே உம்மை துதிக்கிறோம்.
- ✦ தற்காலிக ஆசாரியத்துவத்தை ஒழித்து, நித்திய ஆசாரியராய் எந்நாளும் வீற்றிருக்கும் தூயவரே உம்மை ஸ்தோத்தரிக்கிறோம்.

நாம் விளங்கிக்கொள்ள வேண்டிய காரியம் இதுதான். பழைய உடன்படிக்கையோடு ஏதோ ஒன்றைக் கூட்டி அல்லது ஏதோ ஒன்றைக் குறைத்து தேவன் புதிய உடன்படிக்கையை அறிவிக்கவில்லை. “நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்” (வெளி 21:5) என்ற வசனத்தின்படி முற்றிலும் மாறுபட்ட வித்தியாசமான ஒரு புதிய உடன்படிக்கையைப் பிறப்பித்தார். பழைய உடன்படிக்கை “செய், அப்பொழுது பிழைத்திருப்பாய்” என்கிறது. புதிய உடன்படிக்கை “பிழைத்திரு, அப்போது செய்வாய்” என்கிறது. பிழைத்திருப்பதின் மூலமாக மட்டுமே பூரணத்துவம் உருவாகும்.

### மாசற்ற இரத்தத்தின் வல்லமை:

ஆடு, காளைகளின் இரத்தம் சரீரத்தின் அசுத்தத்தை மட்டுமே தற்காலிகமாக நீக்கியது. ஆனால் நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவின் இரத்தம் நமது குற்றமுள்ள மனசாட்சியைச் சுத்திகரித்து, ஜீவனுள்ள தேவனுக்கு ஆராதனை செய்யும்படி நம்மை விடுதலையாக்கியது.

“இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை” என்று நியதியைத் தம் சொந்த திவ்விய இரத்தத்தால் நிறைவேற்றிய அன்பே உமக்கு துதி செலுத்துகிறோம்.

- ✦ ஒரேமுறை சிந்தப்பட்ட மாசற்ற இரத்தத்தின் மூலம் நித்திய மீட்பைச் சம்பாதித்துத் தந்த இரட்சகரே, உம்மைப் போற்றுகிறோம்.

### புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர்:

பழைய உடன்படிக்கையின் மத்தியஸ்தர், பழைய உடன்படிக்கையின் பலவீனங்களை மாற்றி, தம்முடைய மரணத்தின் மூலமாக அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளும்படி, புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரான இயேசுகிறிஸ்துவே, நீர் துதிக்கு பாத்திரர்.

### பாவத்தைப் போக்கத் தோன்றி, மீண்டும் வரப்போகிறவர்:

பலமுறை திரும்பத் திரும்பச் செலுத்தப்பட்ட மிருகப் பலிகளுக்கு மத்தியில், உலக முடிவிலே தம்மைத் தாமே ஒரேமுறை பலியிடுவதினாலே பாவங்களை முழுமையாகப் போக்கிய மன்னவனே, உமக்கு ஆராதனை.

### இந்த ஆசாரியத்துவத்தின் மேன்மைகள் மூன்று

கிறிஸ்துவே - பலியிடமாயிருக்கிறார்
கிறிஸ்துவே - பலி செலுத்தும் ஆசாரியன்
கிறிஸ்துவே - பலியாக இருக்கிறார்

தம்மை நோக்கிக் காத்திருக்கிறவர்களுக்கு பாவமில்லாமல் இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் மகிமையோடு வெளிப்படவிருக்கும் ராஜாவே, உமக்கு என்றென்றும் துதியும், கனமும், மகிமையும் உரித்தாவதாக! ஆமென்!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

**VISION**

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth Wing**


www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266


## தனிப்பிரதி ரூ. 25/-
## ஆண்டு சந்தா ரூ. 250/-

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX


இளம் வாலிபர்களின் அறிவியல் களம் - பியூரெட் - 5
டார்லீன் டீப்லர் ரோஸ் - 6 & 7
போலந்து - 10
தேர்வுக்குப் பிந்தைய மனஅழுத்தம் - 12
Prodigal Mate - 14
குல்ஹையா பேச்சுவழக்கு மொழி - 15
பரிசுத்தம்... காத்துக்கொ ள்வோம் - 20
கனம் பொருந்திய பேலிக்ஸ் - 22


# வேதக் களத்தில் சபையைக் கட்டுவோம்

சபைக்கு தலையாயிருக்கிற கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் கேரீத் அன்பர்களுக்கு வாழ்த்துக்கள்!

அப்போஸ்தலர்களின் காலமே புதிய ஏற்பாட்டு சபையின் துவக்கம் என அறிகிறோம். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட சீஷர்கள் வசனத்தை பிரசங்கித்தார்கள். வசனத்தைக் கேட்டவர்கள் அதற்கு கீழ்ப்படிந்து, வசனத்தை ஏற்றுக்கொண்டார்கள். கீழ்ப்படிந்தவர்கள் ஒன்று கூடி கர்த்தரை ஆராதித்தார்கள். இப்படி ஆரம்பிக்கப்பட்ட சபை, வளருகின்ற சபையாக இருந்தது. அப். 6:7இல் **"தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்"** என்பதாக வாசிக்கிறோம். சீஷர்கள் மூலம் எருசலேமில் சபை உருவானது. தொடர்ந்து பவுல் கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கிறார். பிலிப்பியில் பவுல் கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கும் போது லீதியாள் கர்த்தரை ஏற்றுக் கொள்கிறாள். இங்கே ஒரு சபை உருவானது. பிலிப்பி சபை வேகமாக வளர்ந்து விசுவாசத்தில் உறுதிப்பட்டது என்று பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் இருந்து அறிந்துக்கொள்கிறோம். பவுல் தொடர்ந்து தனது மிஷனெரிப் பயணங்களில் வேத வசனத்தை விதைத்துக்கொண்டே இருந்ததால் சபைகள் வளர்ந்து பெருகிக்கொண்டே இருந்தது. **"இவ்வளவு பலமாய் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது"** என்பதை அப். 19:29இல் வாசிக்கிறோம். ஏனென்றால் தேவனுடைய வார்த்தை வல்லமையுள்ளது. இதைத் தான் கர்த்தர் ஏசாயா 55:11இல் **"அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்"** என்று கூறுகிறார்.

அப்போஸ்தலர் காலத்தைத் தொடர்ந்து அநேக தேவனுடைய மனிதர்கள் வேத வசனத்தை விதைத்தார்கள். கையினால் எழுதப்பட்டிருந்த ஆங்கில வேதாகமத்தை அச்சு வடிவில் கொண்டு வந்தவர் வில்லியம் டிண்டேல். சாதாரண மக்களின் கைகளில் வேதாகமத்தை தவழச் செய்த இவர் அக்டோபர் 6, 1536ஆம் ஆண்டு இங்கிலாந்தில் கம்பத்தில் கட்டி, தீ வைத்துக் கொல்லப்பட்டார். இதன் விளைவு இங்கிலாந்தில் வேதாகம சங்கம் உருவானது.

தொடர்ந்து மிஷனெரிகள் பலர் இந்தியாவிற்கு வந்து வேத வசனத்தை விதைத்ததினிமித்தம் சபைகள் உருவாகி, வளர்ந்தது. இப்படி உருவான சபைகளிலிருந்து இன்றைக்கு ஊழியர்கள் புறப்பட்டு சென்று, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் கர்த்தருடைய வசனத்தை விதைத்து வருவதால் சபை உருவாகிக்கொண்டே வருகிறது. நாம் இயக்கமாக இந்த பிரதானப் பணியைச் செய்துக் கொண்டிருக்கிறோம். தேவனுடைய மனுஷன் எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாக மாறுவதற்கு வேத வசனம் காரணமாய் இருக்கிறது என்பதை 2 தீமோ. 3: 17இல் பவுல் குறிப்பிடுகிறார். பேதுரு, பவுல், தீமோத்தேயுவைப் போன்று சபையை உருவாக்கும் தலைவர்கள் இன்றைக்கு தேவை.

பிரியமான வாலிபர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் சபையை உருவாக்கும் தலைவர்களாக மாற வேண்டும். இதற்கு உங்களுடைய வாலிப நாட்களில் வேத வசனத்துக்கு முக்கியத்துவம் கொடுங்கள். வேத வசனத்தை அறிவிக்க புறப்பட்டுச் செல்லுங்கள். புதிய சபைகள் நாடு எங்கும் உருவாகட்டும்.

ஆகஸ்ட் மாதத்தில் தென்காசி பிராந்தியத்தில் நடைபெற்ற உபவாச கூடுகை, திருப்பத்தூரில் நடந்த உபவாச ஜெப முகாம் ஆகியவற்றில் கலந்துகொண்டது அனைவரின் ஆவிக்குரிய வாழ்விற்கும் மிக ஆசீர்வாதமாக இருந்தது. ஆகஸ்ட் 15 தீப் மீனாட்சிபுரம் மற்றும் ஆகஸ்ட் 23ஆம் தேதி பாடிகுப்பத்தில் நடைபெற்ற வாலிபர் கூடுகைகளைக் கர்த்தர் ஆசீர்வதித்து கொடுத்தார். இந்த கூடுகைகளுக்காக ஜெபித்து, உழைத்த நமது தலைவர்களை ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக.

செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள வாலிபர் கூடுகைகள் மற்றும் ஜார்கண்ட் பணித்தள விஜயங்களை கர்த்தர் ஆசீர்வதித்து நல்ல விளைவுகளைத் தர உங்கள் ஜெபங்களில் எங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள். வேத வசனத்தில் வளர்ந்து பெருகிட ஆண்டவர் நமக்கு கிருபைத் தருவாராக. ஆமென்.

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்

*ஜெ. டேனியல் அருள்மணி*

*"சபையின் அஸ்திபாரம் நல் மீட்பர் கிறிஸ்துவே;*
*சபையின் ஜன்மாதாரம் அவரின் வார்த்தையே"*





### தகப்பனின் ஆசீர்வாதமும் தலைவனின் தரிசனமும்

## திருப்தியான ஆகாரம்

# ஆசேர்

REV. DANIEL GNANAPRAGASAM

திருப்தி என்பது நம்மிடம் உள்ளவற்றைக்கொண்டு பற்றுடன் ஏங்காமல் இருக்கும் மனநிலையாகும். இந்த மனநிறைவு மகிழ்ச்சி மற்றும் அமைதி ஆகியவற்றுடன் தொடர்புடையது. "இதற்கு மேல் எதுவும் பெரிதாகத் தேவையில்லை" என்ற மனநிலையை வெளிப்படுத்தும் பக்குவமான நிலை.

"திருப்தி என்பது பொருள்களின் நிறைவில் அல்ல; அது இருதயத்தின் நிறைவில் இருக்கிறது". தகப்பன் யாக்கோபின் எட்டாவது மகனும், லேயாளின் வேலைக்காரி சில்பாளின் இரண்டாவது மகனுமாகிய ஆசேரைக் குறித்து இக்கட்டுரையில் சிந்திக்க அழைக்கப்பட்டுள்ளோம். ஏற்கனவே "ஏராளமாயிருக்கிறது" என்று காத்தின் பிறப்பினிமித்தம் மகிழ்ந்திருந்த லேயாளுக்கு, மற்றுமொரு நன்மையான ஆசேரின் பிறப்பு நிகழ்ந்தது. அதினிமித்தம் மகிழ்ச்சியடைந்த லேயாள், "நான் பாக்கியவதி, ஸ்திரீகள் என்னைப் பாக்கியவதி என்பார்கள் என்று சொல்லி, அவனுக்கு ஆசேர் என்று பெயரிட்டு தன் மனநிறைவை வெளிப்படுத்தினாள்." ஆசேர் என்பதற்கு மகிழ்ச்சியானவர் அல்லது ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று பொருள்.

### ஆசேரின் மனநிலையும், சுபாவமும்:

பொதுவாக வேதாகமத்தில் ஆசேரைப் பற்றிய சில விவரங்களை மட்டுமே காணமுடிகிறது. யூத மரபு அவரை உண்மையும், பொது நன்மைகளையும் நாடிய ஒரு நற்பண்புள்ள மனிதராக சித்தரிக்கிறது. இத்தகவல்களை உறுதிப்படுத்தும் விதமாகவே யாக்கோபின் ஆசீர்வாதக் கூறலிலும், மோசேயின் தீர்க்கதரிசன கூற்றுகளிலும் நாம் காண்கிறோம். கானானியரைத் துரத்திவிடாமல் அவர்கள் நடுவே குடியிருந்த ஆசேரியர்கள் (நியா. 1:32), அவர்களுக்கு எதிரான போருக்கு தெபொராளின் அழைப்பை அலட்சியப்படுத்தி தங்கள் கூடாரங்களிலே தங்கிக்கொண்டார்கள் (நியா. 5:17). இந்த சிறிய தடுமாற்றத்தை திருத்திக்கொண்டு, கிதியோனின் நாட்களிலும் (நியா. 6:35), பின்பு தாவீதின் நாட்களிலும் (1 நாளா. 12:36) தங்கள் யுத்த பங்களிப்பை வழங்கினார்கள். எசேக்கியா ராஜாவின் நாட்களில் "கர்த்தரைத் தேட மனதுள்ளவர்களாய்" எருசலேமுக்கு வந்தார்கள் (2 நாளா. 30:11). எருசலேம் பயணம் என்பது பல மைல்களைக் கடந்துசெல்லும் வெறும் பயணம் மட்டுமல்ல; அது மனந்திரும்புதல் மற்றும் கடவுளுடன் மீண்டும் இணைந்து கொள்ளவேண்டும் என்ற விருப்பமாகும். பொதுவாக, ஆசேர் கோத்திரத்து பெண்கள் ஞானமுள்ளவர்களாகவும், நற்பண்புள்ளவர்களாகவும், மற்ற கோத்திரத்தாரால் விரும்பப்படுகிறவர்களாகவும் இருந்தார்கள் என்று யூதமரபு கூறுகிறது. எகிப்துக்கு யாக்கோபுடன் சென்ற 53 பேரன்களுக்கு மத்தியில் சென்ற ஒரே பேத்தி ஆசேரின் குமாரத்தி (ஆதி. 46:17)ஆவாள். வனாந்தர மக்கள்தொகை கணக்கெடுப்பிலும் (எண். 26:46), கோத்திரப் பட்டியலிலும் (1 நாளா. 7:30) இவளது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கோத்திரத்தின் உயிர்ப்பாக புதிய ஏற்பாட்டில் பானுவேலின் குமாரத்தியாகிய அன்னாள், தேவாலயத்திற்கு கொண்டுவரப்பட்ட இயேசுவை அடையாளம் கண்டுகொண்டு, எருசலேமில் மீட்புக்காக காத்திருந்த அனைவருக்கும் அவரைப்பற்றி அறிவித்தார் (லூக்கா 2:38). தனது அமைதியான நீடித்த விசுவாசத்தினால் சாட்சி பகர்ந்தார்.

### தகப்பனின் ஆசீர்வாதம்:

"ஆசேருடைய ஆகாரம் கொழுமையாயிருக்கும்; ராஜாக்களுக்கு வேண்டிய ருசிவர்க்கங்களை அவன் தருவான்" (ஆதி. 49:20) என்று யாக்கோபு ஆசேரை ஆசீர்வதிக்கிறார். ஆசேர் கோத்திரத்தார் செழிப்பான மேற்கு கடலோரக் கலிலேயா பகுதியில் வாழ்ந்தனர். ஏராளமானதானியம்,கோதுமை,ஒலிவஎண்ணெய்விளைவிப்பதற்கு ஏற்ற குறைந்த வெப்பநிலையும், அதிக மழைப்பொழிவும் கொண்ட பகுதியாக இப்பிரதேசம் காணப்படுகிறது. கர்மேல் மலையிலிருந்து வடக்கே லெபனானின் அடிவாரம் வரை பரவியிருந்த ஆசேரின் கோத்திரப்பகுதியில் வாழ்ந்த ஊசாவின் மகன் பானா, சாலொமோன் ராஜாவிற்கு ஏராளமான உணவுப்பொருட்களைச் சேகரித்து அனுப்பினான் (1 ராஜா. 4:7, 16). இவ்வாறு யாக்கோபின் ஆசீர்வாதம் ஆசேரின் வாழ்வில் நிறைவேறியது.

### தலைவனின் தரிசனம்:

உபா 33:24, 25இல் "ஆசேர் புத்திர பாக்கியமுடையவனாய், தன் சகோதரருக்குப் பிரியமாயிருந்து, தன் காலை எண்ணெயிலே தோய்ப்பான். இரும்பும், வெண்கலமும் உன் பாதரட்சையின் கீழிருக்கும்; உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனும் இருக்கும்" என்று மோசே ஆசேர் கோத்திரத்தாரைக் குறித்து கூறுகிறார். ஆசேர் கோத்திரம் மற்ற கோத்திரங்களைக் காட்டிலும் அதிக கீழ்ப்படிதலுடனும், நியாயத்தீர்ப்புகளுக்கு ஆளாகாமலும் இருந்தது என்று நம்பப்படுகிறது.

-இதன் தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# பியூரெட்



MR. ISAAC KAMALESH

Hi teens, Mathematics geometry boxலிருந்து அநேக காரியங்களைக் கற்று வந்தாய். இப்போது நாம் வேதியியல் ஆய்வகத்திற்குள் போய் ஒரு equipmentலிருந்து புது காரியத்தைக் கற்றுக்கொள்வோம். இன்று நாம் கற்றுக்கொள்வது வேறொன்றுமல்ல Burette தான்.

பியூரெட் என்பது மேல்நிலை (11-12ஆம் வகுப்பு) வேதியியல் மாணவர்கள், குறிப்பாக டைட்ரேஷன் (Titration) சோதனைகளுக்குப் பயன்படுத்தும் மிக முக்கியமான கண்ணாடிக் கருவிகளில் ஒன்றாகும்.

**இதன் பயன்கள்:**

1. அமிலம்-கார டைட்ரேஷன் (Acid–base titration): அறியப்படாத அமிலம் அல்லது காரத்தின் செறிவைக் கண்டறியப்பயன்படுகிறது. Ex.: தரநிலை NaOHஐப் பயன்படுத்தி HClஇன் செறிவைக் concentration கண்டறிதல்.
2. ரெடாக்ஸ் டைட்ரேஷன் (Redox titration): ஆக்சிஜனேற்றம்–ஒடுக்க வினைகள் (oxidation-reduction) நிகழும்போது பயன்படுத்தப்படுகிறது. Ex.: KMnO மற்றும் ஆக்சாலிக் அமில டைட்ரேஷன்.
3. அறியப்படாத செறிவை (concentration) கண்டறிதல்: அறியப்பட்ட செறிவுள்ள ஒரு கரைசல், பியூரெட்டிலிருந்து அறியப்படாத ஒரு கரைசலில், வினை அதன் இறுதிப் புள்ளியை அடையும் வரை மெதுவாகச் சேர்க்கப்படுகிறது.
4. துல்லியமான கனஅளவை அளவிடுதல்: பியூரெட், மாணவர்கள் திரவத்தைச் சொட்டுச் சொட்டாகச் சேர்த்து, அதன் கனஅளவை மிகத் துல்லியமாக அளவிட அனுமதிக்கிறது. பொதுவாக, மாணவர்கள் ஆரம்ப மற்றும் இறுதி அளவீடுகளைப் படித்துக் கணக்கிடுவார்கள்.
5. பயன்படுத்தப்பட்ட கன அளவு = இறுதி அளவீடு – ஆரம்ப அளவீடு
6. ஒரு கரைசலின் வலிமையைத் தீர்மானித்தல் (Determining strength of a solution): டைட்டர் மதிப்பிலிருந்து, மாணவர்கள் ஒரு அறியப்படாதக் கரைசலின் வலிமை, மோலாரிட்டி அல்லது நார்மாலிட்டியைக் (molarity or normality) கணக்கிடலாம்.

**இதைப் பயன்படுத்த முன்னெச்சரிக்கைகள் உண்டு:**

பியூரெட்டில் வைக்கப்படவிருக்கும் கரைசலைக் கொண்டு பியூரெட்டைக் கழுவவும், அதன் நுனியில் காற்றுக் குமிழ்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்தவும். மேலும் பியூரெட்டை செங்குத்தாக வைத்து மெனிஸ்கஸைக் கண் மட்டத்தில் (meniscus at eye level) படிக்கவும். இறுதிப் புள்ளிக்கு அருகில் கரைசலை மெதுவாகச் சேர்க்கவும். பியூரெட் குழாயில் கசிவு ஏற்பட அனுமதிக்கக்கூடாது. அளவீடுகளைக் கவனமாகப் பதிவு செய்ய வேண்டும்; பியூரெட் பொதுவாக 0.1 மில்லி லிட்டர் துல்லியத்துடன் பதிவுச் செய்யலாம். பியூரெட் டைட்ரேஷன் சோதனைகளின் போது, ஒரு கரைசலின் மாறுபடும் கன அளவைத் துல்லியமாக வழங்குவதற்கும், அளவிடுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

**பியூரெட் - உன் வாழ்க்கைக்கு ஒரு துல்லியமானக் கருவி என்பதை மறந்துவிடாதே:**

“வேதியியல் ஆய்வகத்தில் பியூரெட் எப்படி துல்லியத்தைக் கற்பிக்கிறதோ, அதுபோல தேவன் நம் வாழ்க்கையில் பரிசுத்தத்தையும், சமநிலையையும் உருவாக்குகிறார்”.

**சின்னத் தீர்மானங்கள் பெரிய விளைவுகளை உணர முடியும் (Burette adds one drop at a time):**

பியூரெட் ஒரே நேரத்தில் ஊற்றாது; சொட்டுச் சொட்டாக சேர்கிறது. அதுபோல நமது குணமும் ஒரே நாளில் உருவாகாது. தினமும் ஒரு நல்ல பழக்கம், தினமும் 10 நிமிடம் வேதாகமம் வாசித்தல், ஒரு ஜெபம், கீழ்ப்படிதல் இவையே பெரிய மாற்றத்தை உண்டாக்குகின்றன. சிறிய நல்லச் செயல்கள் பெரியக் குணத்தை உருவாக்கும். “கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்” (லூக்கா 16:10).

**ஒவ்வொரு காரியத்திலும் எல்லையை அறிந்துக்கொள் (Every titration has an end point):**

டைட்ரேஷனில் சரியான நேரத்தில் நிறுத்தாவிட்டால் முழு பரிசோதனையும் தவறாகிவிடும். வாழ்க்கையிலும் எல்லைகள், ஒழுக்கம், சுயக்கட்டுப்பாடு அவசியம். எப்போது நிறுத்த வேண்டும் என்பதையும் அறிந்திருப்பது ஞானம். மொபைல், விளையாட்டு, நண்பர்கள் என ஒவ்வொன்றிலும் எல்லை முக்கியம். “புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்” (கொலோசெயர் 4:5)

**துல்லியமே நம்பகத்தன்மை (Accuracy builds trust):**

0.1 mL கூட முக்கியம். சிறிய தவறும் முடிவை மாற்றிவிடும். நம் வார்த்தை, நேர்மை, பொறுப்பு ஆகியவற்றிலும் தேவன் துல்லியத்தை விரும்புகிறார். நேர்மையான சிறிய விஷயங்கள் பெரிய நம்பிக்கையை உருவாக்கும். “உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை இல்லையென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்” (மத்தேயு 5:37).

**காற்றுக் குமிழ்களை அகற்று (Remove hidden bubbles):**

பியூரெட்டில் காற்றுக் குமிழ்கள் இருந்தால் அளவீடுத் தவறாகும். நம் உள்ளத்தில் மறைந்த பெருமை, பொய், பொறாமைப் போன்றவை இருந்தால் வாழ்க்கையும் தவறாகும். உள்ளத்தை சுத்தப்படுத்தினால் வாழ்க்கைச் சரியாக ஓடும். “சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது” (எபேசியர் 4:31).

**கண் மட்டத்தில் வாசி (Read at eye level):**

மெனிஸ்கஸை சரியாகப் படிக்க கண் மட்டத்தில் இருக்க வேண்டும். வாழ்க்கையிலும் தேவனின் பார்வையில் நம்மைப் பார்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும்; உலகத்தின் பார்வையில் அல்ல. சரியானப் பார்வைச் சரியானத் தீர்மானத்தைத் தரும். “மேலானவைகளையே நாடுங்கள்” (கொலோசெயர் 3:2)

**Final Challenge:**

தம்பி, தங்காய்! உனக்கு ஒரு பைனல் சேலஞ்ச் நீ கர்த்தருடையக் கரத்தில் ஒரு பியூரெட்டாக இரு (Be God’s Burette). தேவன் உன்னைப் பயன்படுத்தும்போது, ஒவ்வொரு சொல், செயல், முடிவும் துல்லியமாகவும் மற்றும் பரிசுத்தமாகவும் இருக்கட்டும். “உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது” (மத்தேயு 5:16) .

# டார்லீன் டீப்லர் ரோஸ்



டார்லீன் தனது அம்மா அப்பா மற்றும் சகோதரி ஆகியோருடன் ஒரு அன்பானக் குடும்பத்தில் வளர்ந்தாள். அவர்களுக்கு அயோவாவில் உள்ள பூன் என்ற இடத்தில் ஒரு நல்ல வீடு இருந்தது. அது அமெரிக்காவின் நடுவில் உள்ள ஒரு மாநிலம். அங்கு அவர்களுக்கு ஏராளமான பண்ணைகளும், மகிழ்ச்சியை உணரவைக்கும் நல்ல மக்களும் இருந்தனர். இவள் நல்ல செல்வ செழிப்புடன் வளர்ந்தாள்.

**டார்லீன் இரட்சிப்பு:**

ஆனால் டார்லீன் அவளது வாழ்க்கையில் முக்கியமான ஒன்றை இழந்துகொண்டிருப்பது அவளுக்கே தெரியாது. டார்லீனுக்கு ஒன்பது வயதாக இருந்தபோது வானொலியில் நிகழ்ச்சிகளைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அப்போது டாக்டர். ராபர்ட் ஆர். பிரவுன் என்ற போதகர் உலகில் தீயக் காரியங்கள் இருப்பதற்கும், நாம் கடவுளுடன் நெருக்கமாக இல்லாததற்கும் காரணம் உலகில் பாவம் இருப்பது தான் என்றும், பாவம் நம் ஒவ்வொருவருக்குள்ளும் தொற்றிக் கொண்டுள்ளதால், நாம் தீயக் காரியங்களைச் செய்வதற்கு வழிவகுக்கிறது என்றும் கூறினார். மேலும் இதிலிருந்து நாம் விலகியிருக்க நம்முடைய முழு வாழ்க்கையையும் இயேசுவிடம் ஒப்படைத்தால் அவர் நம்மை வழிநடத்தி, நம் இருதயத்தை மாற்றுவதோடு, நமக்கு பரிசுத்த ஆவியின் வரத்தையும் தருகிறார் என்று கூறினார். டாக்டர். பிரவுன் சொல்வதெல்லாம் உண்மை என்று தன் இருதயத்தில் உணர்ந்த டார்லீன் இவ்வாறு ஜெபித்தாள். "அன்பான இயேசுவே நான் பாவத்திலிருந்தும், சுயநலத்திலிருந்தும் விடுபட விரும்புகிறேன். நீங்கள் எனக்குள் வாசம் செய்யுங்கள்.

டார்லீன் தன் அம்மாவிடம் தேவாலயத்திற்குச் செல்லலாமா என்று கேட்டாள், அவர்களிடம் கார் இல்லாததால் தேவாலயத்திற்குச் செல்ல பனிப்புயலுக்கு நடுவே 4 மைல் நடக்க வேண்டியிருந்தது. அங்கு நடந்த ஆராதனைப் பாடல்கள், பைபிள் வசனங்கள் மற்றும் பைபிள் கதைகள் அவளுக்கு மிகவும் பிடித்திருந்ததால் எல்லாவற்றையும் மனப்பாடம் செய்துக்கொண்டாள். அவள் இயேசுவைப் பின்பற்ற ஆரம்பித்ததிலிருந்து, காரியங்கள் தனக்கு சாதகமாக இல்லாதபோதும் பாடவும், மகிழ்ச்சியாக இருக்கவும் கற்றுக்கொண்டாள்.

**டார்லீன் அர்ப்பணிப்பு:**

ஒருநாள் தேவாலயத்திலிருந்து மிஷனெரி மாநாட்டிற்கு நிதியுதவி செய்தார்கள். மிஷனெரி என்பவர்கள் இயேசுவைப் பற்றி கேள்விப்படாத மக்களுக்கு அவரைப்பற்றி கூற தன் குடும்பம், வீடு, வசதிகள் எல்லாவற்றையும் விட்டுக்கொடுக்கத் தயாராக இருப்பவர்கள் என்று தெரிந்துக்கொண்டு, தானும் அவ்வாறு செல்ல ஆசைக் கொண்டாள். ஆனால் தனக்கு 10 வயதுதானே என்று நினைத்துக் கவலைப்பட்டாள். அப்போது அவள் தோளில் ஒரு கை பட்டதை உணர்ந்து, அது யார் என்று பார்க்கத் திரும்பினாள். ஆனால் அங்கு யாரும் இல்லை. அப்பொழுது இயேசு தனக்குள் இருப்பதை உணர்ந்து, என்ன ஆண்டவரே? என்று கேட்டாள். இயேசு அவளிடம் "என் மகளே, நீ எதை இழக்க நேரிட்டாலும், எனக்காக எங்கும் செல்வாயா? என்றார். அதற்கு டார்லீன், "ஆண்டவரே உமக்காக எங்கேயும் செல்வேன்!" என்றாள். அதிலிருந்து தான் வளர்ந்ததும் மிஷனெரியாகச் செல்லவேண்டும் என்று மனதில் நினைத்துக்கொண்டாள்.

டார்லீன் வளர்ந்து கல்லூரிக்குச் சென்றபோது, ஒரு நல்ல மிஷனெரியாக ஆவதற்கு உதவும் வகுப்புகளைத் தெரிந்தெடுத்தாள். இயேசு எங்கு அனுப்ப விரும்புகிறார் என்று உறுதியாகத் தெரியாததால், எதைப் படிப்பது என்று அறிவது மிகவும் கடினமாக இருந்தது.

**டார்லீன் திருமணம்:**

தான் மிஷனெரியாக மாற முடிவு செய்ததை அனைவருக்கும் சொல்லும்படி போதகர் டார்லீனிடம் கேட்டார். இயேசு தன்னிடம் எங்கு வேண்டுமானாலும் செல்வாயா? எதையும் விட்டுக் கொடுப்பாயா? என்று கேட்டதை அனைவருக்கும் சொன்னாள். அவள் பேசிக் கொண்டிருந்தபோது, ரஸ்ஸல் அவள் சொல்வதைக் கேட்டான். அப்போது கர்த்தர் அவனிடம் "இவள்தான் உனக்கு ஏற்ற பெண்!" என்று மெதுவாகச் சொன்னார். எனவே, ரஸ்ஸல் டார்லீனைத் திருமணம் செய்துக்கொண்டு, அவளுடன் நியூக்கினியாவுக்குச் சென்று ஒரு மிஷனெரியாக இருக்க முடிவுச் செய்தான். ஆனால் அவளை விட 12 வயது மூத்தவனான அவனோடுச் செல்ல டார்லீன் விரும்பவில்லை. ஆனால் ரஸ்ஸல் அன்பானவனாகவும், மென்மையானவனாகவும், அழகானவனாகவும் இருந்தான். மேலும் அவளைப் போலவே இயேசுவைப் பின்பற்றுவதில் அர்ப்பணிப்புடன் இருந்ததால் ரஸ்ஸலை ஏற்றுக்கொண்டாள்.

இருவரும் திருமணம் செய்துக்கொண்டு நியூகினியாவிற்கு சென்றனர். அங்குள்ள அரசாங்க ஊழியர்கள் டச்சு மொழிப் பேசியதால், அவர்கள் அம்மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அவர்களுக்கு டச்சு மொழி நன்றாக பேச வரும்வரை அவர்கள் நெதர்லாந்தில் வசித்தனர். பின்னர், நியூகினியாவில் பேசப்படும் மொழியான இந்தோனேசிய மொழியைக் கற்றுக்கொள்வதற்காக அவர்கள் இந்தோனேசியாவிற்குச் சென்றனர். ரஸ்ஸல், அவர்கள் இருவரும் பழங்குடி மக்களுடன் வாழ்வதற்கு ஒரு வீட்டைத் தயார் செய்ய, தொடர்ந்து காட்டிற்குள் பயணம் செய்து வந்தார்.

**பழங்குடி வாழ்க்கை:**

இறுதியாக காட்டிலுள்ள தங்கள் புதிய வீட்டுக்கு குடிப்பெயரும் அந்த நாள் வந்தது. ஆனால் அவர்களால் விமானத்தில் பயணிக்க முடியாததால், டார்லீன் தனது பொருட்கள் அனைத்தையும் அங்கேயே விட்டுவிட்டு, ஒரு கைப்பையில் தனக்கு தேவையான உடைகளை மட்டும் எடுத்துக்கொண்டுச் சென்றாள். அங்கு கபாகு மக்களைச் சந்தித்தனர். அங்கு இயேசுவைப் பற்றி அறிந்த முதல் நபர்கள் ரஸ்ஸலும்,

MR. B. BENJAMIN

டார்லீனும் மட்டுமல்ல; இவர்களே முதல் வெள்ளையர்களும் ஆவர். விசித்திரமான ஆடைகளை அணிந்து, வித்தியாசமானத் தோற்றமுடைய இவர்களைப் பற்றி அறிந்துக்கொள்ள கபாகு மக்கள் மிகவும் ஆர்வமாக இருந்தனர். அந்த கபாகு மக்கள் குள்ளமான, சிறிய உருவம் கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் விசித்திரமான ஆடைகளை அணிந்திருந்தனர். துளையிடப்பட்ட அவர்களின் மூக்குகளில் எலும்புகள் செருகப்பட்டிருந்தன. ஆனால் ஒரு மாதத்திற்குப் பிறகு, டார்லீன் அவர்களுடைய சிறிய உடல்களையோ, துளையிடப்பட்ட மூக்குகளையோப் பார்க்கவில்லை. மாறாக தினமும் தன்னுடன் ஜெபித்த வயதான பெண்மணியானக் கெப்பாவையோ, அவர்களுடன் குடியேறிய இளம் அனாதைச் சிறுவனான டெகாமோவையோ, அல்லது வேடிக்கையான கதைகளைச் சொல்ல விரும்பிய இமோபாயையோ அவள் கண்டாள். அவர்கள் தான் அவளுடைய நண்பர்கள். அவர்கள் தன் மக்களாக அவள் உணர்ந்தாள். டார்லீனும், ரஸ்ஸலும் பழங்குடியினருடன் பழகத் தொடங்கியிருந்தபோது, அவர்களுக்கு ஒரு கெட்டச் செய்தி கிடைத்தது. ஜப்பானியர்கள் இந்த பசிபிக் தீவுகள் அனைத்தையும் வேகமாகக் கைப்பற்றி வந்ததால், டச்சு அரசாங்கம் அவர்களை அவர்களுடைய மக்களிடமிருந்து வெளியேற்றிக் கொண்டிருந்தது. அங்கிருந்து கிளம்புவதற்கு டார்லீனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அவள் அப்போதுதான் தன் ஊழியத்தை தொடங்கியிருந்தாள்.

**ஜப்பானிய வீரர்கள்:**

ஜப்பானிய வீரர்கள் தங்கள் மிஷனெரி இல்லத்தைக் கண்டுபிடித்தபோது அவர்கள் ஆச்சரியப்படவில்லை. முதலில் அவர்கள் எல்லா ஆண்களையும் கட்டிப்போட்டு ஒரு லாரியில் ஏற்றினார்கள். டார்லீனையும், மற்ற பெண்களையும் சிறை முகாமுக்கு அழைத்துச் சென்றனர். ரஸ்ஸல் லாரியின் ஓரத்தில் சாய்ந்து டார்லீனிடம் "நான் உன்னை விட்டு ஒருபோதும் விலகமாட்டேன் என்று கடவுள் சொன்னது ஞாபகம் இருக்கிறதா? என்றார். அது தான் ரஸ்ஸலைக் கடைசியாக பார்த்தது. அவள் எதையும் கண்டு பயப்படவில்லை. அப்போது தேவன் அவளிடம் பேசி, தீயச் சக்திகள் உங்களைத் தாக்கக்கூடும். ஆனால் இறுதியில் தேவனே வெல்வார் என்று அவளுக்கு நினைவூட்டினார். நீங்கள் துன்பப்பட்டாலும் அல்லது உங்கள் உயிரை இழந்தாலும், இயேசுவைப் பின்பற்றினால், நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

**சிறை முகாம்:**

சிறை முகாம் வாழ்க்கை மிகவும் கடினமாக இருந்தது. அவர்கள் எப்போதும் பசியுடன் இருந்தனர். அங்கு பன்றிகளை வளர்ப்பது, உணவுப் பயிர்களை நடுவது, ஜப்பானிய வீரர்களுக்காக லாரிகளில் பொருட்களை ஏற்றுவது என நாள் முழுவதும் அவர்கள் கடினமாக உழைக்க வேண்டியிருந்தது. பன்றிகளால் ஈக்கள் வந்தன; அவை தண்ணீரில் கிருமிகளைப் பரப்பின. இந்த அசுத்தமான நீரினால் ஏற்படும் வயிற்று நோயான சீதபேதியால் பலர் இறந்தனர். அவர்கள் தினமும் சாப்பிட்ட அரிசி கஞ்சியில் போதுமான வைட்டமின் பி இல்லாததால் சிலருக்கு பெரிபெரி நோய் ஏற்பட்டது. இதனால் வயிறு உப்புசமும், காய்ச்சலும் உண்டாகும். சில சமயங்களில் அவர்களுக்கு மலேரியாவும் வந்தது.

**பாதிரியார் சந்திப்பு:**

ஒரு நாள் ஆண்கள் முகாமைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்கப் பாதிரியார், பெண்கள் முகாமுக்கு வருகைத் தந்தார். எல்லா பெண்களும் அவரிடம் தங்கள் கணவர்கள், தந்தையர்கள் மற்றும் மகன்களைப் பற்றிய செய்திகளைக் கேட்டு அவரிடம் மன்றாடினார்கள். டார்லீனும், ரஸ்ஸலைப் பற்றி பாதிரியாரிடம் கேட்கப்பயந்தாள். இறுதியில் ரஸ்ஸல் இதயக் கோளாறு மற்றும் சீதபேதியால் இறந்துவிட்டதாக டார்லீனின் தோழியிடம் பாதிரியார் சொல்லி அனுப்பியிருந்தார். டார்லீன் கடவுளிடம், வேண்டாம்! தயவுசெய்து ரஸ்ஸலை எடுத்துக்கொள்ளாதீர்! என்று கதறினாள். அவள் கடவுள் மீது கோபப்பட ஆரம்பித்தாள். அவள் ஜப்பானியர்களை வெறுத்தாள். ஆனால் கர்த்தர் அவளிடம் "என் மகளே, நான் இன்னும் உன்னுடன் இருக்கிறேன். நான் உன்னை ஒருபோதும் கைவிடமாட்டேன். நீ ஆழமான தண்ணீரின் வழியே நடக்க வேண்டியிருந்தாலும், நீ மூழ்கிப்போக நான் அனுமதிக்க மாட்டேன்" என்றார். மீண்டும் ஒருமுறை அவளுடைய சுயக்கட்டுப்பாட்டிற்குக் கடவுளே ஆதாரமாக இருந்தார்.

**ஜெயிலர் திரு. யமாச்சி:**

அன்றைய தினம் பிற்பகல் ஜெயிலர் திரு. யமாச்சி, டார்லீனைத் தன் அலுவலகத்திற்கு அழைத்து அவளுடைய கணவர் இறந்துவிட்டார் என்று கூறினார். பாதிரியார் அவளிடம் முன்பே சொல்லியிருந்ததால் டார்லீனுக்கு அது அதிர்ச்சியை அளிக்கவில்லை. "நான் உன்னை ஒருபோதும் விட்டு போகமாட்டேன் என்று ரஸ்ஸல் சொன்னது அவளுக்கு நினைவுக்கு வந்தது. திரு. யமாச்சியின் அலுவலகத்திற்குள் ஒரு நல்ல வீராங்கனையாக இருந்து, சரியான வார்த்தைகளைப் பேச கடவுள் தனக்கு உதவுவார் என்று அவள் நம்பினாள். பிறகு திரு. யமாச்சியிடம் பேசுவதற்கு அனுமதி கேட்டு "நான் இயேசு கிறிஸ்துவின் சீடர். நம்பிக்கையற்றவர்களைப் போல நாங்கள் துக்கப்படுவதில்லை. ரஸ்ஸல் பரலோகத்தில் மகிழ்ச்சியாக இருக்கிறார் என்று எனக்குத் தெரியும். நான் சோகமாகவும், அவரை நினைத்து ஏங்கினாலும், ஒருநாள் நானும் அங்கே அவருடன் சேருவேன் என்று எனக்குத் தெரியும் என்று கூறினாள். அதுமட்டுமல்லாமல், தனக்கு 10 வயதாக இருந்தபோது அவருக்காக எங்கு வேண்டுமானாலும் செல்வேன், எதையும் விட்டுக்கொடுப்பேன் என்று கடவுளிடம் செய்த ஜெபத்தைப் பற்றியும் அவரிடம் கூறியதோடு, உங்களின் நலனுக்காக நான் தொடர்ந்து ஜெபிப்பேன் என்று கூறினாள். டார்லீன் அந்தப் பகுதியைக் கடக்கும்போது, திரு.யமாச்சியின் கண்களில் கண்ணீர் வழிந்தோடுவதையும், அவர் அவ்விடத்தைவிட்டு வெளியேச் செல்வதையும் கண்டாள். தொடர்ந்து திரு. யமாச்சிக்காக ஜெபித்துக் கொண்டேயிருந்தாள். பல ஆண்டுகளுக்குப் பிறகு திரு. யமாச்சி மிதிவண்டி உதிரிபாகக் கடை நடத்தி வருவதாகவும், அவர் கழுத்தில் சிலுவை டாலர் அணிந்திருப்பதாகவும் டார்லீனின் தோழி கூறினாள். கர்த்தர் தான்பட்ட துன்பங்கள் அனைத்தையும் ஒரு நல்ல காரியத்திற்காகப் பயன்படுத்தியுள்ளார் என்று டார்லீன் மகிழ்ந்தாள்.

டார்லீன் சில ஆண்டுகளுக்கு முன்புதான் அல்சைமர் நோயால் இறந்தார். டார்லீனைச் சுற்றியுள்ள அனைவரும் தாங்கள் இவரைப்போல ஒருவரையும் இதுவரைச் சந்தித்ததில்லை என்று கூறினார்கள்.

பிரியமான வாலிபர்களே, சோதனைகளுக்கு மத்தியில் உங்கள் நம்பிக்கை எப்படியுள்ளது?

**"ஆண்டவரே, உமக்கு உண்மையாக சேவை செய்ய எனக்கு உதவும், எல்லா சூழ்நிலைகளிலும் நீங்கள் போதுமானவர் என்பதை நான் உணர கிருபைத்தாரும். ஆமென்!"**




MR. ISAAC KAMALESH



செப்பனியா கண்ட களம் இன்றைய நாளுக்கு தேவையான ஒரு எச்சரிப்பு என்று சொல்லலாம். இவர் நின்று ஆடிய களம் புறஜாதிகள் அல்ல, தனது சொந்த ஜனங்கள் அதுவும் நாங்கள் கடவுளுடைய மக்கள், எங்களுக்கு எந்த ஒரு அடிமைத்தனமும், தீங்கும் வராது என்று நினைத்துக்கொண்டிருந்த ஜனங்கள். தங்களைத் தாங்களே மெச்சிக்கொண்டு தாங்கள் கடவுளுக்குள் வாழ்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருந்த மக்களைப் பார்த்து உங்களுக்கு "கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது; நீங்கள் வேதத்தைத் தேடுங்கள்" என்று சொன்னால் எப்படி இருக்கும். அனைவரும் திகைத்துப்போய் நின்ற காலம், இன்றைய நாட்களைப் போலவே எழுப்புதல், ஆராதனை, எழுப்புதல் கூட்டங்கள் எல்லாம் இருக்கிறது. ஆனால் மக்களுக்கு இடையே வேத அறிவு எங்கே? இப்படிப்பட்டவர்களைப் பார்த்து உங்களுக்கு நியாயத்தீர்ப்பு நாள் சமீபமாக இருக்கிறது என்று சொன்னால், நாம் என்ன நினைப்போம். இப்படிப்பட்ட களம் கண்டவர் தான் செப்பனியா.

ஏனைய சிறிய தீர்க்கதரிசிகளின் புத்தகங்கள் போலவே, இந்த தீர்க்கதரிசியின் புத்தகமும் அதன் ஆசிரியரின் பெயரையே தலைப்பாக பெற்றுள்ளது. இப்பெயரின் அர்த்தம் - "கர்த்தர் மறைக்கிறார்" (2:3). கர்த்தர் மறைக்கிறார் என்பதின் மூல அர்த்தம், ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் நிர்வாணத்தைத் திடீரென்று பார்த்து முகம் சுளித்து தன் முகத்தை மூடிக் கொள்வது என்ற பொருளில் அமைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், லட்சக்கணக்கான யூதர்கள் வாழ்ந்த அந்நாட்களில், இந்த பெயரில் வேறு மூன்று நபர்கள் இப்பெயருடன் காணப்படுகிறார்கள். ஏனென்றால் யூதர்கள் இப்படிப்பட்ட பெயரை வைப்பது கிடையாது.

இவர் தன்னுடைய வம்சவழியான முந்தைய நான்காவது தலைமுறை எசேக்கியா ராஜா. இதினால் தீர்க்கதரிசிகளின் மத்தியில் ராஜவம்சத்தில் வந்த ஒரு தீர்க்கதரிசி என்று தனித்து நிற்கிறார் (1:1). இவர் ராஜ வம்சத்தில் வந்தபடியால் அந்நாட்களில் இவர் பிரசங்கித்த போது யூதாவை ஆண்டுவந்த யோசியா ராஜாவைச் செவிகொடுத்து கேட்கச் செய்திருக்கலாம்.

யோசியா ஆட்சி செய்த (கி.மு. 640-609) காலத்தில் தீர்க்கதரிசியே தன் செய்திகளுக்குரிய காலத்தைக் குறித்திருக்கிறார். தேசத்தின் தார்மீக மற்றும் ஆவிக்குரிய நிலைமைகளைப் (1:4-6; 3:1-17) பார்க்கும் போது, யூதா விக்கிரகாராதனை மற்றும் பொல்லாப்பில் திளைத்து - யோசியாவின் சீர்திருத்தங்களுக்கு முன் உரைத்த தீர்க்கதரிசன வார்த்தைகள் இவை என்பதாக காண்கிறோம். கி.மு.628இல் யோசியா பாகால்களின் விக்கிரகத்தோப்புகளையும், பலிபீடங்களையும் தகர்த்து, விக்கிரகங்களை நொறுக்கித் தூளாக்கி, எல்லாச் சிலைகளையும் வெட்டிப்போட்ட பின்பு (2நாளா. 34:7-8) கள்ளத் தீர்க்கதரிசிகளின் எலும்புகளைச் சுட்டெரித்துப்போட்டார் எனக் காண்கிறோம். கி.மு. 622இல் மோசேயின் நியாயப்பிரமாணப் புத்தகம் கண்டெடுக்கப்பட்டது (2நாளா.34:8; 35:19). தொடர்ந்து, செப்பனியா கி.மு.635-625 வரை தீர்க்கதரிசனம் உரைத்திருக்கலாம். மேலும் இவர் எரேமியாவின் சமகாலத்தில் வாழ்ந்தவர்.

அரசியல்ரீதியாக, யூதா ஜனங்கள், அசீரியர்கள் வடக்கு ராஜ்யத்தில் பெலன் குறைந்ததால் தங்களுக்கு எந்தவொரு தீங்கும் வராது என்று நினைத்துக்கொண்டிருந்த காலம். ஆவிக்குரிய ஜீவியத்தில், எசேக்கியா ராஜாவின் மகன் மனாசேயின் 40 வருடங்களுக்கு மேலான ஆட்சி மற்றும் எசேக்கியாவின் பேரன் ஆமோனின் இரண்டுவருட ஆட்சி காலம் முழுவதும் பொல்லாப்பும், எதிர்ப்பும் நிறைந்ததாக இருந்தன. கி.மு. 622இல் கர்த்தருடைய ஆலயத்தில் பழுதுநீக்கும் வேலை நடந்து கொண்டிருந்த போது, பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா நியாயப்பிரமாண புத்தகத்தைக் கண்டெடுத்தார் (2ராஜா. 22:8). அந்தப் புத்தகத்தை ராஜாவாகிய யோசியா வாசித்த பின், அநேக சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார் (2ராஜா. 23). யோசியாவின் ஆரம்ப காலங்களில், மிகப்பெரிய எழுப்புதல் உண்டாவதற்கு முன், செப்பனியா உரைத்த தீர்க்கதரிசன வார்த்தைகள் நிச்சயமாக யோசியா ராஜா கொண்டுவந்த பல சீர்திருத்தங்களில் தாக்கத்தை ஏற்படுத்தின எனலாம்.

"கர்த்தருடைய நாளில்" செப்பனியாவின் செய்தி, கடைசி நாட்கள் மிக நெருக்கமாக இருக்கின்றன; நேபுகாத்நேச்சார் ராஜா மூலமாக வரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சமீபமாக இருக்கின்றது என்று யூதா தேசத்தை எச்சரித்தன. "கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது என எச்சரித்த நாள்; கோபாக்கினை, பிரச்சினை, துன்பம், அழிவு, பாழடைதல், அந்தகாரம், இருள், மப்பும் மந்தாரமுமான நாட்கள், அடர்ந்த இருள், எக்காளம் மற்றும் எச்சரிப்பின் சத்தம் நிறைந்த நாளாக இருக்கும். இப்படிப்பட்ட தேவ கோபாக்கினை - தேவ வாக்கின் மத்தியிலும் தீர்க்கதரிசி, கர்த்தரைத் தேடும்படியாய் ஜனங்களுக்குப் புத்திசொல்கிறார். நியாயத்தீர்ப்பின் மத்தியிலும் ஒருமறைவிடம் உண்டு எனவும், மீந்திருக்கும் அவருடைய விசுவாசிகளுக்கு இறுதியில் இரட்சிப்பு உண்டு என்ற வாக்குத்தத்தத்தையும் அறிவிக்கிறார் (3:9-20).

பாவத்தைக்குறித்து ஒரு தெளிவற்ற கண்டனத்தை இந்த புத்தகம் முன்வைக்கிறது. காரணம் தாங்கள் உயிர் மீட்பு உள்ள மக்கள் கூட்டம் என்று நினைத்துக் கொண்டிருந்த மக்களைப் பார்த்து நீங்கள் கர்த்தரைத் தேடுங்கள் என்கிறார். தாழ்மை உள்ளவர்களைப் பார்த்து, நீங்கள் தாழ்மையைத் தேடுங்கள் என்கிறார், எழுப்புதலின் மக்களைப் பார்த்து நீங்கள் கர்த்தருடைய வேதத்தைத் தேடுங்கள் என்கிறார். உங்களுக்குப் புரியும்படி நான் சொல்ல வேண்டுமென்றால் கார் ஓட்டிக் கொண்டிருக்கும் ஒரு நபரை, விரைவாகத் தட்டி நிறுத்திவிட்டு, நீ காரை ஓட்டு என்று சொன்னால் எப்படியிருக்கும். கார் ஓட்டுபவன் என்ன நினைப்பான். இதே போல தான் அங்கு இருந்தது.

மேலும், யூதா தேசத்தின் மீது விரைவில் நிறைவேற இருக்கின்ற நியாயத்தீர்ப்பையும் முன்வைக்கிறது. நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன் (3:9) என்னும் வார்த்தைகள், இதில் நாம் கவனிக்க வேண்டியது, பொதுவாக "பாஷை" என்ற வார்த்தை "உதடு" என்று மொழிபெயர்க்கப்படும். இதனை நாம் "சுத்தம்" என்ற வார்த்தையுடன் சேர்த்துப் பார்த்தால், உள்ளான மனிதனின் பாவம் சுத்திகரிக்கப்படும் என்று அர்த்தம் கொள்கிறது.

**இந்தப் புத்தகத்தை இரண்டு பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம்:**

**முதலாவது - கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு (1-3:8):** பூமியனைத்தின் மீதும் (1:2, 3), யூதாவின் மீதும் (1:4-2:3) இருக்கும். தேசங்களின் மீது (2:4-15) (பெலிஸ்தியா, மோவாப் / அம்மோன், எத்தியோப்பியா, அசீரியா).

**இரண்டாவது - கர்த்தருடைய ஆசீர்வாதம் (3:9-20):** தேசங்களுக்கு (3:9-20), யூதா தேசத்திற்கு (3:11-20)

இந்தக் கோணத்தில் செப்பனியா புத்தகத்தை வாசித்து, கர்த்தருடைய நாளுக்கு ஆயத்தமாவோம்.

# அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள்!

## கஸ்பா பூர்ணியா பணித்தளம்
## பூர்ணியா மாவட்டம்
## பீகார் மாநிலம்

### அறிமுகம்:

கஸ்பா என்பது வடகிழக்கு பீகாரின் கோசி சீமாஞ்சல் பிரிவின் கீழ் உள்ள பூர்ணியா மாவட்டத்தின் ஒரு ஒன்றியமாகும் (Block). இங்குள்ள புகழ்பெற்ற கோயில் 'மா பூரன் தேவி' ஆகும். இதனாலேயே இது பூர்ணியா மாவட்டம் என்று அழைக்கப்படுகிறது. சிலர் "பூரன் ஆரண்யா" (முழுமையான காடு) என்பதிலிருந்து காலப்போக்கில் பூர்ணியா என்று அழைக்கப்பட்டது என்றும் கூறுகிறார்கள். இது ஒரு விவசாயம் சார்ந்த பொருளாதாரத்தைக் கொண்ட பகுதி. சோளம் ("பீகாரின் சோளக் கிண்ணம்" என்று அழைக்கப்படுகிறது), சணல் மற்றும் வாழை ஆகியவற்றை முக்கிய விளைபொருட்களாகக் கொண்டுள்ளது. பூர்ணியா மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை 2,54,39,42 (25,43,942) ஆகும். பூர்ணியா மாவட்டத்தின் எழுத்தறிவு விகிதம் 35.10% மட்டுமே.

பீகாரிலேயே அதிக மழைப்பொழிவு மற்றும் மிதமான காலநிலையைக் கொண்டுள்ளதால் பூர்ணியா 'ஏழைகளின் டார்ஜிலிங்' எனும் புனைப்பெயரைப் பெற்றுள்ளது.

### சமூகப் பிண்ணனி:

இந்து சமயம் - 75.19%, இஸ்லாம் - 23.26%, கிறிஸ்தவம் - 0.80%, சீக்கியம் - 0.12%, சமணம் - 0.35%, பிற - 0.52%. அங்கிகா மற்றும் பூர்பி மைதிலி ஆகிய அதன் வட்டார மொழிகள் உட்பட, மைதிலி பூர்ணியாவின் பூர்வீக மொழியாகும். பீகார் மாநிலத்தின் அதிகாரப்பூர்வ மொழிகளான இந்தி மற்றும் உருது ஆகியவை பரவலாகப் பேசப்படுகின்றன.

இப்பகுதியில் ரஜக், சர்மா மற்றும் முசாஹர் போன்ற மக்கள் அதிக அளவில் வாழ்கின்றனர். இவர்களில் நாம் முசாஹர் மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய வாஞ்சிக்கிறோம்.

### முசாஹர் மக்கள் (MUSAHAR PEOPLE)

முசாஹர் என்பது கிழக்கு கங்கைச் சமவெளி மற்றும் தெராய் பகுதியில் காணப்படும் பட்டியலினப் (SC) பிரிவைச் சேர்ந்த சமூகம் ஆகும். இவர்கள் ரிஷதேவ், சதா, மாஞ்சி, பன்பாசி என்றும் அழைக்கப்படுகிறார்கள். பீகாரில், "முசாஹர்" என்ற சொல் போஜ்புரி சொல்லான "மூஸ் + அகார்" (அதாவது எலி தின்பவர்) என்பதிலிருந்து உருவானதாகக் கூறப்படுகிறது. இவர்கள் எலி பிடிக்கும் பாரம்பரிய தொழிலைக் கொண்டிருந்ததால் இப்பெயர் பெற்றனர்.

பூர்ணியா மாவட்டத்தில் முசாஹர் மக்களின் மக்கள் தொகை 2,09,448 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்கள் மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய பட்டியலினக் குழுவாக உள்ளனர். இவர்கள் தற்போது பெரும்பாலும் நிலமற்ற விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள்; வேலை இல்லாத காலங்களில் வாழ்வதற்காக இன்னும் எலி பிடிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இந்தியாவில் பட்டியல் இனமக்களுக்குக் கீழாக, மிகவும் விளிம்பு நிலையில் உள்ள மகாதலித் பிரிவில் இவர்களும் ஒருவர்.

முசாஹர் மக்கள் முக்கியமாகப் பிணைக்கப்பட்ட விவசாயக் கூலிகளாக உள்ளனர், ஆனால் பெரும்பாலும் ஒரு வருடத்தில் எட்டு மாதங்கள் வரை வேலை இல்லாமல் இருக்கிறார்கள். குழந்தைகள் தங்களின் பெற்றோருடன் வயல்களிலோ அல்லது குப்பை பொறுக்குபவர்களாகவோ வேலை செய்து, நாளொன்றுக்கு ₹25-30 ($0.35-0.40) மட்டுமே சம்பாதிக்கிறார்கள். முசாஹர் சமூகத்தின் ஒட்டுமொத்த எழுத்தறிவு விகிதம் 3% ஆகும், இது பெண்களிடையே 1% என்ற மிக மோசமான நிலைக்குச் சரிவடைகிறது. சில மதிப்பீடுகளின்படி, முசாஹர் கிராமங்களில் 85% வரை ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுகாதார மையங்களுக்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக இருப்பதால், மலேரியா மற்றும் கலா-அசார் (kala-azar) போன்ற நோய்கள் பரவலாக உள்ளன.

நாங்கள் சட்டப்பூர்வமாகத் தீண்டத்தகாதவர்கள் அல்ல, ஆனால் மறைமுகமான பாகுபாடு இன்னமும் இருக்கிறது" என்று சௌதாகர் ரிஷ கூறினார். "எங்களுக்குப் பள்ளிக்கூடம் இல்லை, மருத்துவமனை இல்லை, சாலைகள் இல்லை, வேலைவாய்ப்புகளும் இல்லை. மனிதன் நிலவுக்குச் சென்று கொண்டிருக்கிறான், ஆனால் இங்கே பூமியில் சமூகம் இன்னும் சாதியால் மனிதர்களைப் பிரிக்கிறது.

இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) அறிக்கையின்படி, இவர்கள் ஆண்டிற்கு 3,600 ரூபாய் ($42) முதல் 12,000 ரூபாய் வரை மட்டுமே சம்பாதிக்கிறார்கள்.

### சாதகமான சூழ்நிலைகள்:

1. இது மகிழ்ந்திருக்க ஏழைகளின் டார்ஜிலிங்காக உள்ளது.
2. அராரியா மற்றும் கிஷன்கஞ்ச் போன்ற அருகிலுள்ள மாவட்டங்களில் ஏற்கனவே மிஷனரிகளின் குழு உள்ளது.
3. நம்மிடம் சுமார் 500 விசுவாசிகளும் 3 பகல்நேரப் பராமரிப்பு மையங்களும் (Day care centres) உள்ளன.

### ஜெபிக்க வேண்டியவை:

1. இந்த மக்களிடையே சென்று பணியாற்ற வாஞ்சையுள்ள மிஷனெரிகள் எழும்ப ஜெபிப்போம்.
2. இந்த வஞ்சிக்கப்பட்ட சமூகத்தின் குழந்தைகளுக்குக் கற்பிக்கக் கல்விப் பணிசெய்யும் மிஷனெரிகள் எழும்ப ஜெபிப்போம்.
3. இவர்களின் சுகாதாரத்தை உயர்த்த மருத்துவ மற்றும் துணை மருத்துவப் பணியாளர்கள் எழும்ப ஜெபிப்போம்
4. இவர்கள் கண்ணியமான வாழ்க்கை வாழ்வதற்கான வேலைவாய்ப்புகள் உருவாக ஜெபிப்போம்.



முசாஹர் மக்கள்



Mr. Suriya Kumar



# போலந்து



போலந்து, தனது செழுமையான கலாச்சார மரபுகள், மாற்றம் எதிர்கொள்ளும் மனப்பான்மை மற்றும் வலுவான கிறிஸ்தவப் பாரம்பரியத்திற்காக அறியப்படும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மத்திய ஐரோப்பிய நாடாகும். பெரும்பாலும் “ஐரோப்பாவின் இதயம்” என்று அழைக்கப்படும் போலந்து, ஐரோப்பிய வரலாற்றை வடிவமைப்பதில் ஒரு முக்கியப் பங்கை ஆற்றியுள்ளது.

| | |
|---|---|
| தலைநகரம் | : வார்சா |
| மொழி | : பொலிஷ் |
| அரசியல் அமைப்பு | : பாராளுமன்றக் குடியரசு |
| மக்கள் தொகை | : 38 மில்லியன் |

**கண்ணோட்டம்:**

- • சுமார் 85-90% மக்கள் தங்களை ரோமன் கத்தோலிக்கர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்வதால், கத்தோலிக்கம் இங்கு ஆதிக்கம் செலுத்தும் மதப் பாரம்பரியமாக விளங்குகிறது.
- • புராட்டஸ்டன்ட் மற்றும் சுவிசேஷ சமூகங்கள், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் நகர்ப்புற மக்களிடையே வளர்ந்து வருகின்றன.

**சிறப்பு நிகழ்வுகள்:**

• போலந்தில் பிறந்த புனித இரண்டாம் ஜான்பால், 1978 முதல் 2005 வரை கத்தோலிக்க திருச்சபையின் தலைவராகப் பணியாற்றினார். மேலும் அவர் நவீன காலத்தின் மிகவும் செல்வாக்கு மிக்க ஆன்மீகத் தலைவர்களில் ஒருவராகத் திகழ்கிறார். 2026 செப்டம்பரில் போலந்திலுள்ள கத்தோலிக்க சமூகம், விசுவாச அடிப்படையிலான சுற்றுப்பயணங்கள், கல்விசார்ந்த கருத்தரங்குகள் மற்றும் புனித இரண்டாம் ஜான் பால் புனிதப் பயணம் (செப்டம்பர் 10 - 19) உள்ளிட்ட பல முக்கிய கிறிஸ்தவ நிகழ்வுகளை நடத்த முடிவு செய்துள்ளது. இந்தப் புனிதப் பயணம் உலகெங்கிலுமுள்ள விசுவாசிகளை, அன்புக்குரிய திருத்தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்தொடரவும், அவரது வழியைக் குறித்து சிந்திக்கவும், மேலும் பிராத்தனை, தோழமை மற்றும் கலாச்சார சந்திப்புகள் மூலம் தங்கள் விசுவாசத்தை ஆழப்படுத்தவும் நடத்தப்படுகிறது.

• 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 முதல் 27 வரை, ஃபிஃபா (FIFA) - 20 வயதுக்குட்பட்ட மகளிர் உலகக் கோப்பை என்னும் முக்கிய விளையாட்டை போலந்து நடத்துகிறது.

**போலந்திற்கான ஜெபக் குறிப்புகள்:**

- போலந்திலுள்ள ரோமன் கத்தோலிக்க சமூகத்தின் பெரும்பான்மையானோர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு ஆழமான, தனிப்பட்ட சந்திப்பைப் பெற வேண்டும் என்று நாம் ஜெபிப்போம். விசுவாசமானது பாரம்பரியத்தையும், சடங்குகளையும் கடந்து, ஆண்டவருடனான ஒரு உயிரோட்டமான உறவாக மாறட்டும் .
- போலந்து முழுவதும் சேவையாற்றும் போதகர்கள், மிஷனெரிகள், இளையத் தலைவர்கள் மற்றும் கிறிஸ்தவ அமைப்புகளுக்காக ஜெபிப்போம். அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவரால் உற்சாகப்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, பெலப்படுத்தப்படட்டும்.
- போலந்து முழுவதும் பல நற்செய்தி சபைகள் நிறுவப்படுவதற்கும், விசுவாசிகளுக்குள் ஆழமான ஒற்றுமை ஏற்படுவதற்கும் ஜெபிப்போம்.
- போலந்தின் இளைஞர்கள் தங்கள் விசுவாசத்தில் பலப்படவும், தைரியத்துடனும், மகிழ்ச்சியுடனும் இயேசுவைப் பின்பற்றவும் ஜெபியுங்கள். தேவனுடைய வார்த்தையின்படி வாழ்ந்து, நற்செய்தியைத் தைரியமாகப் பகிர்ந்து, பள்ளிகள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களில் அன்பு, தூய்மை மற்றும் இயேசுவின் மீதான விசுவாசத்திற்கு உதாரணமாகத் திகழும் ஒரு புதிய தலைமுறைத் தலைவர்களாகத் தேவன் இவர்களை எழுப்பும்படி ஜெபிப்போம்.

**நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். (கலாத்தியர் 6:9)**



# சிறுவர் விடுதி, பகல் நேர சிறுவர் பராமரிப்பு மையம் மற்றும் பள்ளிகளுக்கான

# சிறப்பு ஜெபக் கரிசனைகள்





நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணித்தள ஊழியங்களில் தேவன் ஆத்துமாக்களையும், சபைகளையும் திரளாய்த் தந்தபோது, சபைகளைத் தன்னிறைவு பெற்ற சபைகளாக உருவாக்குவதற்கும், தேவபக்தியுள்ள எதிர்கால தலைமுறையை எழுப்புவதற்கும் சிறுவர் விடுதிகள், பள்ளிகள் மற்றும் பகல் நேர சிறுவர் பராமரிப்பு மையங்கள் துவங்கப்பட்டன. முதலில் நவஜீவன் சேவா மண்டல் இயக்கத்தின் மூலமாக நமது பணித்தளங்களில் நிறைவேற்றப்பட்ட இப்பணியை, பின்பு இயக்கமாக நாமே தேவையைக் கருதி செய்யத் துவங்கினோம். இதை இன்றுவரை சிறப்பாக நிறைவேற்ற சிறுவர்களுக்கும், சிறுவர் விடுதி மற்றும் பள்ளிகளுக்குமான ஆதரவாளர்களைத் தேவன் திரளாய் எழுப்பித் தந்துள்ளார். இவ்வூழியங்களைத் தாங்கும் ஆதரவாளர்களுக்காக தேவனைத் துதித்து, இன்னும் இவ்வூழியம் வளர்ந்து பெருக ஜெபிப்போம்.

**துதிக்க:**

- நம் இயக்கத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் 2 பள்ளிகளுக்காகவும், அவைகளில் கல்வி பயிலும் 886 மாணவ, மாணவிகளுக்காகவும், 48 விடுதிகளில் தங்கி படிக்கும் 7443 சிறுவர், சிறுமியருக்காகவும், 30 பகல் நேரக் காப்பகங்களில் பயன்பெறும் 3,181 சிறுவர், சிறுமியருக்காகவும், 22 துவக்கப்பள்ளி மையங்களில் கல்வி பயின்று வரும் 2250 சிறுவர், சிறுமியருக்காகவும், கல்வி நிலையங்கள் மற்றும் விடுதிகளில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்கள், விடுதிக் காப்பாளர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்காகவும் தேவனைத் துதிப்போம்.
- நவஜீவன் சேவா மண்டல் மூலம் நடத்தப்பட்டு வரும் 22 விடுதிகளில் தங்கி, கல்வி கற்று வரும் 1762 சிறுவர், சிறுமியருக்காகவும், 9 இடங்களில் நடைபெற்று வரும் பகல் நேரக் காப்பகங்களில் கல்வி பயின்று வரும் 1162 பிள்ளைகளுக்காகவும், சிசு சிறுமியர் விடுதியில் தங்கிக் கல்வி பயின்று வரும் 74 சிறுமியருக்காகவும், இதில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்காகவும் தேவனைத் துதிப்போம்.
- கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் விடுதிப் பிள்ளைகள் கல்வி அறிவோடு, வேத வசனங்கள், வேதாகமச் சம்பவங்கள், ஜெப வாழ்க்கை, மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு ஆகியவற்றையும் கற்றுக்கொள்வதற்காகவும், தங்கள் திறமைகளையும், தாலந்துகளையும் மேம்படுத்தி ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருவதற்காகவும் தேவனைத் துதிப்போம்.
- பணித்தளங்களில் இயங்கிவரும் கல்வி நிலையங்கள், சிறுவர் விடுதிகள், சமுதாயக் கல்லூரி, பகல் நேர காப்பகங்கள் இவைகளுக்கென நாம் கட்டியுள்ள அனைத்துக் கட்டிடங்களுக்காகவும், அவைகளைக் கட்டுவதற்குத் தரிசனத்துடன் ஜெபித்தும், கொடுத்தும் வருகிற அனைத்து ஆதரவாளர்களுக்காகவும் தேவனைத் துதிப்போம்.
- நம் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கி கல்வி பயின்று பின் மேற்படிப்புகளையும் முடித்து அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றி வரும் அனைவருக்காகவும், மிஷனெரிகளாக, சுவிசேஷகர்களாக ஊழியம் செய்து வருபவர்களுக்காகவும் தேவனைத் துதிப்போம்.
- பஞ்சாப் மாநிலத்தில் மான்சா, சங்ரூர், புத்தலாடா மற்றும் மகாராஷ்டிரா மாநிலத்தில் வாடி ஆகிய இடங்களில் புதிதாக துவங்கப்பட்டுள்ள பகல் நேர காப்பகங்களுக்காகவும், ஜார்க்கண்ட் மாநிலத்தில் குட்டமு என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள துவக்கப்பள்ளி மையத்திற்காகவும் தேவனைத் துதிப்போம்.
- நமது ஜெபங்களைக் கேட்டு மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள ஆலப்பள்ளி விடுதி மீண்டும் திறக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:**

- கல்வி பயிலும் அனைத்து மாணவர்களின் சுகம், பெலனுக்காகவும், விடுதிகளிலிருந்து தினமும் பள்ளிகளுக்கு நடந்தோ, வாகனங்களிலோ செல்லும் அனைத்துப் பிள்ளைகளின் பாதுகாப்பான பிரயாணங்களுக்காக ஜெபிப்போம்.
- கல்வி நிலையங்களில் பணிசெய்யும் ஆசிரியர்கள், விடுதிப் பொறுப்பாளர்கள், விடுதிக் காப்பாளர்கள், சமையல்காரர்கள் மற்றும் பிற பணியாளர்கள் அனைவருக்கும் சுகம், பெலன், பாதுகாப்பு தந்து, தேவன் தொடர்ந்து அவர்களை ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- விடுதிப் பிள்ளைகளின் கல்வித் தேவைகளை ஜெபத்தோடு, கிரமமாகக் கொடுத்து ஆதரித்து வரும் அனைத்து ஆதரவாளர்களின் குடும்பங்களுக்காகவும், அவர்களின் தேவைகளைக் கர்த்தர் சந்தித்து ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.
- கல்வி நிலையங்கள் மற்றும் நமது விடுதிகளில் தங்கிப் படிக்கும் பிள்ளைகள் அனைவரும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், தங்கள் பகுதிகளிலுள்ள நமது சபைகளின் ஊழியங்களில் உற்சாகமாக ஈடுபடவும் ஜெபிப்போம்.
- உயர்கல்வி முடித்து அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பணி செய்து வரும் நமது விடுதிப் பிள்ளைகள் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வாழவும், நல்ல உயர் பதவிகளைப் பெற்று தேவ நாமத்தை தொடர்ந்து மகிமைப்படுத்தவும் ஜெபிப்போம்.
- படிப்பை முடித்து பல இடங்களில் பணி செய்யும் விடுதிப்பிள்ளைகள் தங்கள் சொந்த சமூகத்திற்கு ஆசீர்வாதமுள்ளவர்களாக விளங்க ஜெபிப்போம்.
- பகல் நேரக் காப்பகங்கள், துவக்கப்பள்ளி மையங்களில் பயின்று வந்த பிள்ளைகள், பள்ளிகளில் கல்வி பயில வசதியாக சிறுவர் விடுதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். அவர்கள் புதிய சூழ்நிலைகளைப் பழகிக் கொள்ளவும், அவர்களுக்கு ஏற்ற சாதகமான சூழ்நிலை நிலவவும் ஜெபிப்போம்.
- ஆல்வார் சிறுவர் விடுதிப் பிரச்சனைகள் விரைவில் தீர்க்கப்பட்டு மீண்டும் விடுதி திறக்கப்படவும், அனைத்து விடுதிப் பிள்ளைகளும் மீண்டுமாக விடுதிகளில் வந்து தங்கி படிக்கவும், விரைவில் அரசாங்க அனுமதி கிடைக்கவும் பாரத்துடன் ஜெபிப்போம்.
- நமது பணித்தளங்களில் கல்வி பயில வாய்ப்புகளின்றித் தவிக்கும் நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்குக் கல்வி பயில்வதற்கான வாய்ப்புகள் கிடைக்க ஜெபிப்போம்.

Dr. Godwin & Dr. Azubha

# தேர்வுக்குப் பிந்தைய மனஅழுத்தம்

## (Post-Exam Syndrome)



**என்ன?**

தேர்வுக்குப் பிந்தைய மனஅழுத்தம் என்பது நீண்டகால தேர்வு அழுத்தத்தின் 'பின்விளைவு' ஆகும். தேர்வுகள் முடிந்திருக்கலாம், ஆனால் மனமும் உடலும் இயல்பு நிலைக்குத் திரும்பக் கொஞ்சக் காலம் எடுக்கும். இது ஒரு அதிகாரப்பூர்வ மருத்துவக் கண்டறிதல் அல்ல, ஆனால் தேர்வுகளுக்குப் பிறகு சில மாணவர்கள் அனுபவிக்கும் உணர்ச்சி, உடல் மற்றும் உளவியல் அறிகுறிகளை இது விவரிக்கிறது.

**யாருக்கு?**

ஆய்வுகளின்படி, பின்வரும் மாணவர்களிடையே தேர்வுக்குப் பிந்தைய மனஅழுத்தம் அதிகமாகக் காணப்படுகிறது:

- தீவிரமான போட்டித் தேர்வுகளுக்குத் தயார் செய்யும் மாணவர்கள் (எ.கா: நீட் (NEET) மற்றும் ஐ.ஐ.டி-ஜே.இ.இ (IIT-JEE) நுழைவுத் தேர்வுகள்)
- 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள்
- பல்கலைக்கழகம் மற்றும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள்
- அனைத்துமே சரியாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் (Perfectionist) மனநிலை கொண்ட மாணவர்கள்
- ஏற்கெனவே கவலை அல்லது மனச்சோர்வு உள்ள மாணவர்கள்
- குடும்பம் அல்லது நண்பர்களின் ஆதரவு இல்லாத மாணவர்கள்

**ஏன்?**

மாணவர்கள் பல மாதங்களாக அதிக மனஅழுத்தத்திலும் நெருக்கடியிலும் படிப்பதால் இது நிகழ்கிறது. தேர்வுகள் திடீரென்று முடியும் போது, அவர்கள் சோர்வாகவும், வெறுமையாகவும் அல்லது அடுத்து என்ன செய்வது என்று தெரியாமலும் உணரலாம். அவர்கள் தங்கள் மதிப்பெண்கள், பெற்றோரின் எதிர்வினைகள், கல்லூரி சேர்க்கை அல்லது எதிர்காலத் திட்டங்கள் பற்றி கவலைப்படலாம். நீண்ட நேரம் படிப்பது அவர்களை மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் சோர்வடையச் செய்யும். தேர்வுகளுக்குப் பிறகு தூக்கம், உணவு, உடற்பயிற்சி மற்றும் தினசரி பழக்கவழக்கங்கள் சீரற்றதாக மாறக்கூடும். அவர்கள் தவறாக எழுதிய கேள்விகளைப் பற்றியே தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கலாம், இது அவர்களின் கவலையையும் மனஅழுத்தத்தையும் அதிகரிக்கும்.

**இது ஒரு மாணவரை எவ்வாறு பாதிக்கிறது?**

மாணவர் தொடர்ந்து அளவுக்கு அதிகமாகச் சிந்திப்பார், கவனத்தை ஒருமுகப்படுத்துவதில் சிரமம் இருக்கும், மனரீதியாகச் சோர்வடைவார், எப்போதும் எரிச்சலுடன் இருப்பார், அளவுக்கு அதிகமாக அல்லது மிகக் குறைவாகத் தூங்குவார், வயிற்று அசௌகரியம், தலைவலி, தினசரி செயல்பாடுகளில் ஆர்வம் இழத்தல், சமூகக் கூட்டங்களைத் தவிர்த்தல், அளவுக்கு அதிகமான திரை நேரம் (mobile/ screen time) மற்றும் காரியங்களைத் தள்ளிப்போடுதல் போன்ற பிரச்சனைகளைச் சந்திப்பார்.

**புள்ளிவிவரங்கள்:**

- 'இந்தியா டுடே' நாளிதழின் 2026 பகுப்பாய்வின்படி, ஐந்து ஆண்டுகளில் நீட் தேர்வுடன் தொடர்புடைய குறைந்தது 93 மாணவர் தற்கொலைகள் பதிவாகியுள்ளன. இதில் 2025ஆம் ஆண்டில் மட்டும் குறைந்தது 32 தற்கொலைகள் பதிவாகியுள்ளன, இது அந்த காலகட்டத்தில் மிக அதிகமான எண்ணிக்கையாகும். இவை ஊடகங்களால் கண்டறியப்பட்ட தரவுகள், அரசின் அதிகாரப்பூர்வ கணக்கு அல்ல.
- ஐ.ஐ.டி - ஜே.இ.இ மற்றும் நீட் தேர்வுக்காக ஆயத்தமாகும் மாணவர்களின் தற்கொலைகளை ஆராய்ந்த 2025ஆம் ஆண்டின் ஆய்வுத் திட்டம் ஒன்று, அதன் ஆய்வு காலத்தில் 79 வழக்குகளைக் கண்டறிந்தது (ராஜஸ்தானில் 55 பேரும், தமிழ்நாட்டில் 13 பேரும், தெலுங்கானாவில் 3 பேர்).
- முந்தைய நீட் ஆண்டுகளைப் பற்றிய ஆய்வில், தேர்வு முடிவுகள் வெளியாகும் காலத்தில் இத்தேர்வு தொடர்பான தற்கொலைகள் அதிகரிக்கும் எனத் தெரியவந்துள்ளது; 2018-2019ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட தரவுகளில் சுமார் 55% முடிவுகள் அறிவிக்கப்பட்ட மாதத்தில் நிகழ்ந்துள்ளன.
- தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) தரவுகள், இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தற்கொலை செய்துகொள்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன.

இந்த புள்ளிவிவரங்கள் உணர்ச்சிப்பூர்வமான ஆதரவு, ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் அதிகப்படியான கல்வி அழுத்தத்தைக் குறைப்பதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

**ஜெபிக்க வேண்டிய காரியங்கள்:**

1. ஆண்டவர் அவர்களுக்குப் பதற்றத்திற்குப் பதிலாக அமைதியையும், சோர்வுக்குப் பதிலாக ஓய்வையும், பயத்திற்குப் பதிலாக நம்பிக்கையையும் தர வேண்டும்.
2. மாணவர்கள் அளவுக்கு அதிகமாகச் சிந்திப்பதிலிருந்தும், தேர்வில் செய்த தவறுகளை நினைத்துப் பயப்படும் மனநிலையிலிருந்தும் விடுபட வேண்டும்.
3. திடீரென எழும் அமைதியின்மை மற்றும் பயத்தின் அலையிலிருந்து ஆண்டவர் அவர்களின் இருதயங்களைப் பாதுகாக்க வேண்டும்.
4. ஆண்டவர் அவர்களின் ஆற்றலை மீட்டுத் தந்து, ஆரோக்கியமான அன்றாடப் பழக்கவழக்கங்களை உருவாக்க உதவ வேண்டும்.
5. மாணவர்களுக்கு உணர்ச்சிப்பூர்வமாக ஆதரவளிக்கும் புரிதலுள்ள பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள் மற்றும் வழிகாட்டிகளை ஆண்டவர் அவர்களைச் சுற்றி அமைக்க வேண்டும்.
6. குடும்பங்களுக்கு மாணவர்களை அழுத்தத்திற்கு உட்படுத்தாமல், அன்போடு ஊக்குவிப்பதற்கான "ஞானத்தை" ஆண்டவர் தர வேண்டும்.
7. தங்கள் தேர்வு முடிவுகளை எதிர்கொள்ளும் தைரியத்தையும், எதிர்கால முடிவுகளுக்கான ஞானத்தையும், இயேசு ஒவ்வொரு சூழ்நிலையிலும் தங்களோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையையும் ஆண்டவர் அவர்களுக்குத் தர வேண்டும்.

### சிதைந்த சமூகத்தை சீர்படுத்திய அருட்பணியாளர்

# ஓர் இனிய உரையாடல்

## Mrs. ஜாய்ஸ் பாக்கியநாதராஜ்



**அருட்பணியாளரின் அறிமுகம்:** எனது பெயர் ஜாய்ஸ் பாக்கியநாதராஜ். நான் 19.10.1948இல் பிறந்தேன். எனது அப்பா திரு. தங்கையா, அம்மா திருமதி. ஜெஸம்மாள். நான் இவர்களுக்கு 3வது மகளாகப் பிறந்தேன். நான் சிறு பிராயத்திலிருந்தே வேத வாசிப்பு, தனி ஜெபம், குடும்ப ஜெபம், ஆலய ஒழுங்கு ஆகியவைகளில் வளர்க்கப்பட்டேன்.

**கேள்வி: உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனை எப்போது ஏற்பட்டது?**

**அருட்பணியாளரின் பதில்:** நான் 12 வயதாக இருக்கும்போது ஒரு பெந்தெகொஸ்தே சபையில் அமிர்தபாய் என்ற சந்நியாசி வருவதாக அறிந்து அவர்களைப் பார்க்கச் சென்றேன். அங்கு ஜெபம் நடக்கும்போது அவர்கள் நான் இருக்கும் இடத்திற்கு வந்து கர்த்தர் உன்னை ஊழியத்திற்கு அழைக்கிறார். நீ போவாயா? என்றார். முதல்முறை கேட்கும்போது நான் சின்னப்பிள்ளை எனக்கு தெரியாது என்றேன். இரண்டாம் முறை அதே கேள்வி. நான் எங்க அம்மா, அப்பா விடமாட்டாங்க என்றேன். மூன்றாவது முறை சிறிது கனத்த குரலில் அதே கேள்வி. இயேசப்பா கூப்பிட்டால் நான் போவேன் என்றேன்.

**கேள்வி: நீங்கள் மிஷனெரியாக ஊழியத்தில் இணைந்தது எப்படி?**

**அருட்பணியாளரின் பதில்:** 1971ஆம் ஆண்டு திரு. பாக்கியநாதராஜ் அவர்களோடு எனக்கு திருமணம் நடந்தது. எனது கணவர் கிறிஸ்தவ ஒழுங்கின்படி வளர்க்கப்பட்டவர். அவரது சிறுவயதிலேயே அவரது தகப்பனார் இறந்து விட்டதால் கஷ்டப்பட்டு படித்து ஒரு கம்பெனியில் வேலைச் செய்தார்கள். திருமணம் முடிந்து நாங்கள் ஊட்டிக்கு சென்றோம். சிறிது நாட்களில் எனக்கு அங்குள்ள மருத்துவமனையில் அரசாங்க வேலை கிடைத்து, வாழ்க்கை எந்த குறைவும் இல்லாமல் சென்றுக் கொண்டிருந்தது. எனது கணவர் FMPBஇல் ஜெபக்குழுத் தலைவராக இருந்ததால், பாளையங்கோட்டையில் நடந்த FMPB கிதியோனியர் முகாமிற்கு செல்ல புறப்பட்டார்கள். அப்பொழுது என் கணவரோடு ஆவியானவர் வட இந்தியாவிற்குச் செல்ல வேண்டும் என்று திட்டவட்டமாக பேசியுள்ளார். எனவே என்னிடம் நான் வட இந்தியா போகிறேன், நீயும் என்னோடு வரவேண்டும், பிள்ளைகள் ஹாஸ்டலில் தங்கிப் படிப்பார்கள் என்று சொல்லி FMPB G.S, பேட்ரிக் அண்ணன் எழுதிய கடிதத்தையும் காட்டினார்கள். நான் 2 பேருக்கும் கிடைத்த Government வேலையை விட்டுவிட்டு செல்ல வேண்டுமா? இப்படியெல்லாம் கடவுள் அழைக்க மாட்டார் என்று வாக்குவாதம் செய்தேன். உங்களை அழைத்த தேவன் என்னையும் அழைக்கட்டும் அப்பொழுது செல்லலாம் என்று கூறினேன். அன்று மாலை பெண்கள் கூடுகையில் கலந்துக்கொண்டபோது ஆதி. 28:15ஆம் வசனத்தின் மூலம் தேவன் என்னோடு பேசினார். வீட்டிற்கு வந்த நான் உங்களை ஊழியத்திற்கு அழைத்த தேவன் என்னையும் அழைத்தார் என்று சொல்லி, இனி மரித்தாலும் பிழைத்தாலும் கர்த்தருடைய ஊழியத்தையே செய்யவேண்டும் என்று சொல்லி ஊழியத்தில் இணைந்தோம்.

**கேள்வி: மிஷனெரியாகச் செல்ல அர்ப்பணித்தவுடன் நீங்கள் சந்தித்த சவால்கள் எவை?**

**அருட்பணியாளரின் பதில்:** வட இந்தியா சென்று ஊழியம் செய்ய வேண்டும் என்றால் ஹிந்தி படிப்பது அவசியமாக இருந்தது. அதனால் ஹிந்தி படித்து Exam எழுதினேன். பின்பு எங்களை குஜராத்துக்கு ஊழியத்திற்கு அனுப்பினார்கள். ஆதலால் குஜராத்தி மொழியைக் கற்றுக்கொண்டோம். பின்பு பிப்பளவாடா கிராமத்துக்கு அனுப்பினார்கள். அங்கு மழைக்காலங்களில் பஸ் ஓடாது. பொருட்களை மாட்டு வண்டியில் ஏற்றிவிட்டு, நாங்கள் 10 கி.மீ. நடந்தோம். பின்பு ஆழமான ஆற்றைத் தாண்டி செல்ல வேண்டியிருந்தது. பாலம் கிடையாது, நீச்சலும் தெரியாது. அப்பொழுது ஆதிவாசி சகோதரர்கள் மூன்று பெரிய தேக்கு மர தடிகளை ஒன்றோடொன்று கட்டி, அதில் தகர பெட்டி வைத்து, நாங்கள் இருவரும் உட்கார துடுப்பாலும், தள்ளியும், இழுத்துமாக எங்களை மறுக்கரையில் சேர்த்தனர். மீண்டும் 11 கி.மீ. நடந்து பிப்பளவாடா வந்தோம். எங்களிடம் சைக்கிள் இல்லாததால் எங்கு போனாலும் நடைதான். இது மிகவும் பின்தங்கிய கிராமம் நல்ல பொருட்கள் வாங்க கடை வசதி இல்லை. மின்சார வசதி மற்றும் தண்ணீர் வசதியும் இல்லை. நாங்கள் சோர்ந்து போய் விட்டோம்.

**கேள்வி: சவால்களை மேற்கொண்ட பிறகு உங்கள் ஊழியத்தின் விளைவுகள் என்ன?**

**அருட்பணியாளரின் பதில்:** முதன்முதலாக பர்டி பாடா என்ற கிராமத்தில் வயிறு வலியினால் துடித்த ஒரு வாலிபனுக்கு ஜெபிக்க அழைப்பு வந்தது. ஒரு மந்திரவாதி ஐந்து இடத்தில் சூடு போட்டும் வலி நிற்கவில்லை. நாங்கள் போய் ஜெபித்து வந்தோம். அடுத்த நாள் காலை குடும்பமாக வந்து உண்மையாகவே உங்கள் இயேசு நல்லவர் என்று கூறி அந்தக் குடும்பம் முழுமையாக இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். இதனால் சோர்வு எங்களைவிட்டு நீங்கி மிகவும் உற்சாகமாய் ஊழியம் செய்ய ஆரம்பித்தோம். இன்னும் அநேக அற்புதங்களின் மூலமாய் ஆறு மாதத்திற்குள் ஒரேநாளில் 128 பேர் ஞானஸ்நானம் பெற்று சபையில் இணைந்தனர். டாங்ஸ் மாவட்டம் பிப்பள்வாடாவில் ஏழு ஆலயங்கள் கட்டினோம். 1986இல் நாங்கள் குஜராத் பகுதியிலிருந்து மகாராஷ்டிரா மாற்றமாகி உச்சல் பணித்தளம் வந்தோம். 1988 ஏப்ரல் 30ஆம் தேதி நடந்த மேளா கூட்டத்தில் எதிர்ப்பாளர்கள் ஆலயத்தை உடைத்து, பந்தல், ஸ்டேஜ் எல்லாம் எரித்து என் கணவரையும் பலமாய் அடித்தார்கள். பின்பு அடித்தவர்கள் நீங்கள் மன்னிக்கிற கிறிஸ்தவர்கள் எனக் கூறி மன்னிப்புக் கேட்டார்கள். உடைக்கப்பட்ட ஆலயத்தை திரும்பக் கட்டி ஊழியம் செய்ய தேவன் உதவிச் செய்தார். இங்கும் 7 ஆலயம் கட்டினோம்.

**கேள்வி: உங்கள் ஊழியத்தின் பாதையில் நீங்கள் குடும்பத்தில் சந்தித்த பாடுகள் என்ன?**

**அருட்பணியாளரின் பதில்:** என் கணவர் இருதய பலவீனத்தால் 1990 மே 12ஆம் தேதி கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். 1991, மே 17ஆம் தேதி மாநில முகாம் சென்ற இடத்தில் இளைய மகன் மதில் இல்லாத 70 அடி ஆழத்தில் தவறி விழுந்து மரித்து விட்டான். 2001, அக்டோபர் 13ஆம் தேதி மின்சாரம் தாக்கி மூத்த மகனும் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தான். நாங்கள் பணி செய்து, விட்டு வந்த பகுதிகள், கர்த்தரின் கிருபையால் வளர்ந்து கனிக் கொடுக்கும் நிலையிலுள்ளது. பவுல் நட்டாலும், அப்போலோ நீர் பாய்ச்சினாலும், விளையச் செய்வது கர்த்தரே. பாடுகளோடு பரமன்பணியைச் செய்து வருகிறேன்.

**கேள்வி: கேரீத் வாசகர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

**அருட்பணியாளரின் பதில்:** பிதாவின் சித்தம் செய்ய, இயேசு தன்னையே ஒப்புக்கொடுத்தார். நாமும் கர்த்தரின் சித்தம் செய்ய நம்மை ஒப்புக்கொடுத்து, நிலையான நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள பாவத்தைத் தள்ளிவிட்டு, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடி, ஜீவ கிரீடத்தைப் பெற்றுக்கொள்வோம். சோர்ந்து போகாமல் அழைப்பில் நிலைத்திருந்து, ஆத்தும ஆதாயம் செய்வோம்.

**ஜெபக்குறிப்புகள்:**

- சுவிசேஷத்தை ஒருமுறை கூட கேள்விப்படாத மக்களுக்கு சுவிசேஷம் சென்றடைய...
- சுவிசேஷத்தைக் கேட்டும் பாவ வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பாத ஜனங்களின் மனக்கண்கள் திறக்கப்பட...
- இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் சாட்சியாக வாழ, தான் அறிந்துக்கொண்ட இயேசுவை மற்றவர்களுக்கு அறிவிக்க ஜெபிப்போம்.

Mrs. Jeba Saral

# Prodigal Mate



Hello All, இந்த மாசம் நம்ம நண்பர்களுக்காக நாம ஜெபிக்க போகிறோம். இந்த உலகத்தில் நம்ம அப்பா அம்மாவுக்கு அப்புறம், நமக்கு நெருக்கமானவர்கள் நம்ம நண்பர்கள் தான். அது தவிர்க்க முடியாத ஒரு உறவு. ஆனா ரெண்டு வகையான நண்பர்கள் நமக்கு இருக்கிறார்கள். நமக்கு நண்பர்கள்னு பலபேர் இருக்கலாம், ஆனா நம்ம தனிமையில் தான் இருக்கிற மாதிரி இருக்கும். இல்லனா நமக்கு ரெண்டு, மூணு நண்பர்கள் இருந்தாலும், அவர்கள் எந்த நிலைமையில் நாம் இருந்தாலும் நமக்கு தோளாயிருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இருப்போம். இதுல ஏதாவது ஒரு எண்ணத்தில் தான் நம்ம பல பேர் இருக்கிறோம். இப்போ உன் உண்மையான நண்பர்கள் யார் என்று யோசி!! கணக்கெடுப்புகளின் படி நான்கில், மூன்று வாலிபர்கள் நம் இந்தியாவில், நண்பர்கள் பல இருந்தும் தாங்கள் தனிமையாக இருப்பதாக உணர்கிறார்கள். இதை நாம் 'Loneliness Paradox' என்கிறோம். அதேபோல 80% வாலிபர்கள் தங்களுடைய எல்லா காரியத்தையும், தங்கள் குடும்பத்தினரை விட, தங்கள் நண்பர்களிடமே அதிகம் ஷேர் பண்ணுகிறார்கள். ஆனால் தற்போதைய AI காலகட்டங்களில், வாலிபர்கள் உண்மையான நட்பை வளர்த்துக் கொள்வதைக் காட்டிலும், AI chatbotsசிடம் தங்கள் ஆழமான நட்பை வளர்த்துக் கொள்கிறார்கள். இது கண்டிப்பாக நாம் கவனத்தில் கொண்டு வர வேண்டிய ஒரு விஷயம். நண்பனே நீயே யோசியேன்! எப்படி ஒரு உயிர் இல்லாத AI, உனக்கு வாழ்வின் முக்கிய முடிவுகளையும், உன் கஷ்ட காலத்தில் நிலையான தீர்வையும் கொடுக்க முடியும்??? இதைப் படித்துக் கொண்டிருக்கிற நீயும் பல நேரங்களில், உன் தனிமையில் AI chatbotsசிடம் பேசிக்கொண்டு உன் தற்போதைய கஷ்டங்களுக்கு விடை கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறாயா? அதை இப்பொழுதே நிறுத்து!!! இந்த உலகத்தையும், ஏன் உன்னையே படைத்து, உன்னையும், உன் வாழ்வையும், அழகாக செதுக்கியிருக்கும் உன் தேவனையும், அவருடைய வார்த்தையையும் விட உனக்கு வேற எதுவும் தேவை இல்லை!!! விழித்திடு, உணர்ந்திடு!! So, நம் முதல் prodigal mate AI தான். கடந்த மாதத்தில், தன்னை கண்டித்ததால் AI chatbotஇன் ஆலோசனையின்படி, தன் சொந்த தாயையும், தன் சகோதரனையும் கொன்று போட்ட அர்ஜூன் அரவிந்த் (17 வயது) அமெரிக்கா வாழ் இந்தியனை நாம் பார்க்கலாம். AIஇன் உதவியோடு, பணம் மற்றும் தன் காதலனுக்காக, தன் அப்பா, அம்மா, தங்கையை கொன்ற 24 வயது சுவேதா!! இந்த கொடிய நண்பனிடம் நீயும் சிக்கி விடாதே!! அடுத்ததாக நம்மை இப்படிப்பட்ட தவறான பழக்கவழக்கங்களுக்கும், தவறான முடிவுகளை எடுக்கச் செய்யும் நண்பர்களிடமிருந்தும் தேவன் நம்மை தப்புவிக்க நாம் ஜெபிப்போம். கடந்த மாதத்தில், கோயம்புத்தூரை சேர்ந்த அமுதன், தன் சக மாணவர்களால் போதைப் பொருளுக்காக அடித்து கொல்லப்பட்டுள்ளான். மேலும், தவறான நண்பர்கள், நம்முடைய உருவத்தை, குடும்பத்தைக் குறித்து கூட கேலி, கிண்டல் செய்து நம்மை மன உளைச்சல்களுக்கு உள்ளாக்குகிறவர்களாய் இருக்கிறார்கள். காலேஜ் போகும் வாலிபர்கள் பலர், காதல் வலைகளில் தங்கள் சக நண்பர்களால் சிக்குகிறார்கள்!! இப்படிப்பட்டவர்களிடமிருந்து நாம் விலகி இருக்க வேண்டும்.

**ஜெபக்குறிப்புகள்:**

- AI chatbotsகளிடமிருந்து இளம் வாலிபர்கள் மற்றும் வாலிபர்கள் தப்புவிக்கப்பட ஊக்கமாக ஜெபிப்போம்.
- நம் இந்தியாவில், AIஇன் உதவியோடு, வாலிபர்கள் செய்யும் கொலைகளைத் தேவன் முற்றிலும் நீக்கிப்போட ஜெபிப்போம்.
- வாலிபர்கள் தாங்களே தங்கள் வாழ்வின் முக்கியமான முடிவுகளை எடுக்கவும், தங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வுக் காணவும் தேவனின் பாதத்தில் அமர்ந்து, அப்படிப்பட்ட மனநிலையை அவர்கள் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- தேவனை அறியாத வாலிபர்களுக்கு, கிறிஸ்தவ வாலிபர்கள் உண்மையான நண்பர்களாய் இருக்க பாரத்தோடு ஜெபிப்போம்.
- போதை பழக்கங்களுக்கும், ஆபாச கிளப்புகளுக்கும் வழிகாட்டும் நண்பர்களை வாலிபர்கள் தவிர்த்து, தங்கள் வாலிபத்தை பரிசுத்தமாய் வாழ ஊக்கமாக ஜெபிப்போம்.
- கேலி கிண்டல் செய்யும் நண்பர்களிடம் மாட்டிக் கொண்டு சிக்கி தவிக்கும் வாலிபர்களுக்காக பாரத்தோடு ஜெபிப்போம்.
- கோஷ்டி மோதல்களில் ஈடுபடும் தங்கள் நண்பர்களுக்காக, பலவித சண்டைகளில் ஈடுபடும் வாலிபர்களுக்காக ஜெபிப்போம்.
- Gamblingஇல் பணத்தை விரயம் செய்யும் நண்பர்களினால், பணக்கஷ்டத்தோடு வாடுகிற வாலிபர்களுக்காக ஜெபிப்போம்.
- என் நண்பனாகிய ................க்காக, அவன் இரட்சிப்புக்காக பாரத்தோடு ஜெபிக்கிறேன்.
- எல்லா கால கட்டத்திலும் நான் ஒரு நல்ல நண்பனாக எனக்கு இருக்கும் நண்பர்களுக்கு திகழவும், வேதத்தில் தாவீது யோனத்தானைப் போல உண்மையான நண்பனாய் இறுதிவரை இருக்கவும் ஜெபிக்கிறேன்.

# உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா?

(வேதாகம மொழி பெயர்ப்புப் பணி)

# குல்ஹையா பேச்சுவழக்கு மொழி

குல்ஹையா பேச்சுவழக்கு என்பது பீகாரின் வடகிழக்குப் பகுதியில் வாழும் குல்ஹையா முஸ்லீம் சமூகத்தினரால் முக்கியமாகப் பேசப்படும் ஒரு பிராந்திய பேச்சுவழக்காகும். இது பொதுவாக மைதிலி மொழியுடன் தொடர்புடைய உள்ளூர் பேச்சுவழக்கு அல்லது மொழி வடிவமாகக் கருதப்படுகிறது. சுற்றியுள்ள பீகார் மற்றும் வங்காள மொழிகளின் தாக்கமும் இதில் காணப்படுகிறது.

- ♣ **பகுதி:** வடகிழக்கு பீகாரின் சீமாஞ்சல் பகுதியில், குறிப்பாக அராரியா மற்றும் பூர்ணியா மாவட்டங்களில் பேசப்படுகிறது.
- ♣ **பேசுபவர்கள்:** குல்ஹையா சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் வீடுகளிலும் உள்ளூர் சமூகத் தொடர்புகளிலும் பெரும்பாலும் பயன்படுத்துகின்றனர்.
- ♣ **பண்பாட்டுச் சூழல்:** பூர்ணியா பிரிவின் பல்வகை மொழிச் சூழலில் ஹிந்தி, உருது மற்றும் பிற பிராந்திய மொழிகளுடன் இணைந்து குல்ஹையா பேச்சுவழக்கு பயன்படுத்தப்படுகிறது.

## குல்ஹையா முஸ்லீம் சமூகம்

### அறிமுகம்:

'குல்ஹையா' என்ற பெயர் பாரசீக மொழியில் இருந்து வந்ததாகவும், 'குல்' என்பது 'முழுமையானது' என்றும் 'ஹயா' என்பது 'வெட்கம்/அடக்கம்' என்றும் பொருள்படும் என சிலர் கூறுகின்றனர். சமூகத்தின் சில வரலாற்றுக் குறிப்புகளின்படி, இந்தப் பெயர் 'குலாஹ்' என்ற சொல்லிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. 'குலாஹ்' என்பது தலைப்பாகை அல்லது தொப்பி என்று பொருள்படும்.

இந்த சமூகத்தின் முன்னோர்கள் ஏமனின் ஹத்ரமி (Hadhrami) வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆப்பிரிக்காவின் கொம்புப் பகுதியில் குடியேறியிருந்த அவர்கள் கூலிப்படையினராகவும் போர்வீரர்களாகவும் பணியாற்றிய பின்னர், சிந்து மற்றும் கட்ச் வழியாக வடகிழக்கு பீகாருக்கு வந்ததாகவும் சில வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. பூர்ணியா பிரிவின் இராணுவக் கோட்டைக்கு வலுவூட்டுவதற்காக வங்காள சுல்தானகத்தால் அவர்கள் அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.




### மக்கள் தொகை:

பீகார் சாதிவாரி கணக்கெடுப்புத் தரவுகளின்படி, குல்ஹையா சமூகத்தின் மக்கள் தொகை சுமார் 12.5 லட்சம் எனக் கூறப்படுகிறது. இந்த சமூகத்தினர் பெரும்பாலும் முஸ்லீம்கள். பீகாரில் அவர்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பு (EBC) அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பு (OBC) பிரிவுகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

### கல்வி மற்றும் சமூக-பொருளாதார நிலை:

2011ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்த சமூகத்தின் ஆண்களின் கல்வியறிவு சுமார் 68% என்றும், பெண்களின் கல்வியறிவு 55.6% என்றும் குறிப்பிடப்படுகிறது. குல்ஹையா சமூகத்தினர் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் சாலை வசதிகள் போன்ற அடிப்படைத் தேவைகளின் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர். கல்வி மற்றும் பொருளாதார ரீதியாகவும் அவர்கள் பின்தங்கிய நிலையில் உள்ளனர். அவர்களின் பொருளாதாரம் பெரும்பாலும் விவசாயம், சிறு கடைகள், குதிரைவண்டி, மாட்டுவண்டி போன்ற தொழில்களைச் சார்ந்துள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் சிறந்த எதிர்காலத்தைத் தேடி குல்ஹையா சமூகத்தைச் சேர்ந்த பலர் பிற பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

### சாதகமான சூழ்நிலைகள்:

'ஜீவன் சந்தேஷ்' என்ற பெயரில் மைதிலி புதிய ஏற்பாடு (New Testament) கிடைக்கிறது. இது குல்ஹையா பேச்சுவழக்கிற்கு நெருக்கமானதாக இருப்பதால் உதவிகரமான வளமாக அமையலாம். FMPB இயக்கத்திற்கு அராரியா மற்றும் கிஷன்கஞ்ச் பகுதிகளில் ஏற்கனவே ஊழியத் தளங்கள் உள்ளன. FMPB இயக்கம் பூர்ணியாவிலும் ஊழியத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது. இவை குல்ஹையா மொழி பேசப்படும் பகுதிகளாகும்.

### ஜெபிக்க வேண்டியவைகள்:

- ♣ குல்ஹையா மொழி வேதாகம மொழிபெயர்ப்பாளர்களை ஆண்டவர் எழுப்பித்தர ஜெபிப்போம்.
- ♣ குல்ஹையா மொழி மக்களிடையே முன்னோடி மிஷனெரிகளை (Pioneer Missionaries) ஆண்டவர் எழுப்பித்தர ஜெபிப்போம்.
- ♣ குல்ஹையா மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலை மேம்படவும், கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளில் முன்னேற்றம் ஏற்படவும் ஜெபிப்போம்.



Mr. Suriya Kumar

# VIRAL NEWS பரபரக்கும் களத்தில் உன் விண்ணப்பம்...




## HIV IN UNI

சமீபத்திய அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, கர்நாடகாவில் 7,000க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு HIV தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, பல்கலைக்கழக வளாகங்கள் முழுவதும் பரவலான சுகாதார விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அதிர்ச்சியூட்டும் போக்கு, இளைஞர் சமூகத்தினரிடையே நிலவும் சுகாதாரப் பாதுகாப்பு குறைபாடுகளை வெளிப்படுத்துகிறது.

- கர்த்தர் மாணவர்களின் வாழ்க்கையைப் பற்றிய தவறான முடிவுகளிலிருந்து அவர்களை விடுவித்து வழிநடத்தவும், அவர்கள் சோதனைகளிலிருந்து விடுபட்டு, பாவத்திற்கு அடிபணியாமல் இருக்கவும், நல்ல வழியில் நடந்து, புதுப்பிக்கப்பட்ட வாழ்க்கையைப் பெறவும் ஜெபிப்போம்.

## BORDER CHAOS

சுமார் 49,000 ஆப்பிரிக்க புலம்பெயர்ந்தோர் 24 மணி நேரத்திற்குள் மொராக்கோவிலிருந்து ஸ்பெயினின் சியூடா (Ceuta) எல்லைக்குள் நுழைந்ததாகவும், இதனால் எல்லைப் பாதுகாப்புப் படையினர் பெரும் சிரமத்துக்குள்ளாகி, மிகக் கடுமையான குழப்பம் அங்கு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

- இந்தக் குழப்பமான எல்லைப் பகுதிகளில், தங்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கு கர்த்தர் அமைதி, பாதுகாப்பு மற்றும் மனிதநேயமான தீர்வுகள் கொடுக்க ஜெபிப்போம்.






## WARNING SIGN

பிரமாண்டமான பனிப்பாறைகள் உடைந்து சரிந்து, தலைகீழாக கவிழ்ந்து வருகின்றன. இதனால் சுற்றுச்சூழல் குறித்த அச்சங்கள் அதிகரித்துள்ளன. இதனுடன் கொலம்பியாவில் ஏற்பட்டுள்ள கடுமையான நில அதிர்வுகளும், மவுண்ட் எட்னாவில் தொடர்ந்து ஏற்படும் எரிமலைச் செயல்பாடுகளும் கவலையை ஏற்படுத்துகின்றன.

- இந்த இயற்கைப் பேரிடர்களிலிருந்து கர்த்தர் நாட்டைக் காத்தருளவும், மாறிவரும் நமது பூமியைச் சிறப்பாகப் பாதுகாத்து பராமரிக்க மக்களுக்கு தேவையான ஞானத்தையும், வழிகாட்டுதலையும் கொடுக்கவும் ஜெபிப்போம்.

## CLASSROOM CRISIS

தேசிய அளவிலான கல்வி வளாகங்களில் போதைப்பொருள் துஷ்பிரயோகம் அதிகரித்து வரும் நிலையில், தானே நகரில் உள்ள ஞானோதயா வித்யா மந்திர் கல்லூரியின் 11ஆம் வகுப்பு மாணவர்களும், நாகர்கோவிலில் உள்ள அரசு பள்ளி மாணவர்களும் தங்களது வகுப்பறைகளுக்குள்ளேயே போதைப்பொருட்கள் மற்றும் மதுபானங்களை உட்கொண்ட காட்சிகள் கேமராவில் பதிவாகியுள்ளன.

- கர்த்தர் நமது நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களை ஆசீர்வதித்து, பாதுகாக்கவும், போதை பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் மாணவர்களுக்கு சரியான வழிகாட்டுதல் கிடைத்து அதிலிருந்து விடுபடவும், அவர்களுக்கு தேவையான ஞானத்தைக் கர்த்தர் கொடுக்கும்படியாகவும் ஜெபிப்போம்.






## BLOCKBUSTER VS REAL

உலகளவில் மோதல்கள் தீவிரமடைந்து, பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்து வரும் நிலையில், “Spider-Man: Brand New Day” போன்ற சூப்பர் ஹீரோ திரைப்படங்களுக்கு உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்கள் பல பில்லியன் டாலர்களை செலவழித்து வருகின்றனர். இதன் வசூல் 2 பில்லியன் டாலர்களைத் தாண்டி சாதனைப் படைத்துள்ளது.

- இப்படிப்பட்ட காரியங்களில் தங்களை ஈடுபடுத்தும் மக்களின் கண்கள் திறக்கப்படவும், நிலையற்ற பொழுதுபோக்குகளுக்கு முன்னுரிமை அளிக்காமல், தேவையுள்ள மக்களுக்கு உதவும் மனப்பான்மை இவர்களுக்குள் வளரும்படியாக ஜெபிப்போம்.

## RETWEET AGAIN

Babylon Bee பத்திரிக்கையின் ஒரு நையாண்டிக் கட்டுரையைத் தொடர்ந்து, எலான் மஸ்க் இங்கிலாந்தை வாங்குவது குறித்து கேலியாகக் கருத்து தெரிவித்தார். இது 2017ஆம் ஆண்டு ட்விட்டரை வாங்குவது குறித்து அவர் தெரிவித்த கருத்துகளை நினைவூட்டுகிறது; அதன் பின்னர் அவர் உண்மையிலேயே ட்விட்டரை வாங்கினார். இப்பொழுது இங்கிலாந்தில் நிலவி வரும் தற்போதைய சூழ்நிலைகள் குறித்த கவலைகள் அதிகரித்து வருகின்றன.

- இங்கிலாந்தில் அமைதியற்ற சூழ்நிலை மாறி அமைதி நிலைநாட்டப்படவும், சமூகப் பதற்றங்கள் தணியவும், பசியால் வாடுபவர்களுக்கு உணவு கிடைக்கவும், தலைவர்களுக்கு தேவையான ஞானத்தையும், ஒற்றுமையையும் கர்த்தர் வழங்கவும் ஜெபிப்போம்.



# கொரிந்துவில் பவுலின் ஊழிய வைராக்கியம்



MR. ISRAEL NATHANIEL EDWARD

3rd WEEK MESSAGE - NT -சுவிசேஷ பணிக்களம்

கடந்த மாதம், அத்தேனேவில் எப்பிக்கூரிய மற்றும் ஸ்தோயிக்கருமான தத்துவ ஞானிகளுக்கு பவுல் அளித்த பதிலைப் பார்த்தோம். ஒரு கலாச்சாரத்தில் ஏற்கனவே காணப்படும் உண்மைகளுடன், அந்தக் கலாச்சாரத்தின் பொய்யான மதத்தை ஏற்றுக்கொள்ளாமல், சுவிசேஷத்தை எவ்வாறு தொடர்புபடுத்த முடியும் என்பதற்கான ஒரு தற்காப்பு வாதக் கட்டமைப்பை அது நமக்குக் கொடுத்தது. இந்த மாதம், கொரிந்துவில் முற்றிலும் புதியதொரு சூழ்நிலையைப் பவுல் எவ்வாறு எதிர்கொண்டார் என்பதைப் பார்க்கப் போகிறோம்.

கொரிந்து நகரம் பயணிகளுக்கும், வணிகர்களுக்கும் முக்கியமான சந்திப்பிடமாக அமைந்திருந்தது. மேற்கில் இத்தாலி மற்றும் ஸ்பெயினிலிருந்தும், கிழக்கில் ஆசியா மைனர், பெனீக்கியா மற்றும் எகிப்திலிருந்தும் பொருட்கள் இந்நகரத்தின் வழியாக கடத்தி விடப்பட்டன. பவுலின் காலத்தில் கொரிந்துவில் சுமார் 2,50,000 சுதந்திரமான மக்கள், மேலும் 4,00,000 அடிமைகள் இருந்திருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கொரிந்துவில் குறைந்தது 12 கோயில்கள் இருந்தன. அவற்றில் மிகவும் புகழ்பெற்றதும், அவப்பெயர் பெற்றதுமான ஒன்றாக காதல் தேவதையான அப்ரோடிட்டிக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோயில் இருந்தது. அப்ரோடிட்டியின் வழிபாடு மதத்தின் பெயரில் விபச்சாரத்தை ஊக்குவித்தது. ஒரு காலத்தில் சுமார் 1,000 புனித விபச்சாரிகள் அவளுடைய கோயிலில் பணியாற்றியதாகக் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட ஒழுக்கக்கேடு நிறைந்த நகரத்தில் பவுல் என்ன செய்ய முடியும்?

தேவன் ஏற்கனவே பவுலுக்காக ஒரு பாதுகாப்பான இடத்தை ஏற்பாடு செய்திருந்தார். ஆக்கிலா என்ற யூதரை அவர் சந்தித்தார். அவர் கூடாரங்களைச் செய்யும் தொழிலாளியாக இருந்தார். பவுலும் அதே தொழிலைச் செய்ததால், அவர்களுடன் தங்கி வேலை செய்து தன்னுடைய வாழ்க்கைச் செலவுக்கானதைச் சம்பாதித்தார். ஒவ்வொரு ஓய்வுநாளிலும் ஜெப ஆலயத்தில் யூதர்களுடனும், கிரேக்கர்களுடனும் பேசி, இயேசுவே கிறிஸ்து என்று அவர்களை நம்பச் செய்தார். சீலாவும், தீமோத்தேயுவும் மக்கெதோனியாவிலிருந்து அங்குள்ள விசுவாசிகளின் காணிக்கைகளுடன் வந்தபோது, பவுல் முழுமையாக யூதர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் ஈடுபட்டார். யூதர்கள் அவரை எதிர்த்தபோது, அவர் ஜெப ஆலயத்தை விட்டுவிட்டு புறஜாதியாரிடம் சென்றார். கர்த்தர் தரிசனத்தின் மூலம் அவரைத் தைரியப்படுத்தியபோது, அவர் அங்கு ஒரு வருடமும், ஆறு மாதமும் தேவனுடைய வார்த்தையைப் போதித்தார் (அப். 18:1-11). அத்தேனேவில் செய்ததைப் போலல்லாமல், இங்கு பவுல் மனித ஞானத்தின் கவர்ச்சியான வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் இருந்தார். அதன் விளைவாக, பரிசுத்த ஆவியின் வல்லமை வெளிப்பட்டது (1 கொரி. 2:4).

### அதன் விளைவு என்ன?

பல யூதர்களும், புறஜாதியாரும் நற்செய்தியை ஏற்றுக்கொண்டனர். ஜெப ஆலயத் தலைவனான கிறிஸ்புவும், அவனுடைய குடும்பத்தினரும் பவுலால் நேரடியாக ஞானஸ்நானம் பெற்றனர் (1 கொரி. 1:14). பின்னர் மற்றொரு ஜெப ஆலயத் தலைவனான சொஸ்தெனேயும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார் (1 கொரி. 1:1). ஆக்கிலாவும், பிரிஸ்கில்லாவும் பவுலின் வாழ்க்கையை அருகிலிருந்து கவனித்தும், அவருடைய போதனைகளைக் கேட்டும், வலிமையான விசுவாசிகளாக வளர்ந்தனர். இதனால் அவர்கள் தேவனுடைய வழியைச் சிறப்பாகப் போதிக்கக்கூடியவர்களானார்கள் (அப். 18:26). பின்னர் அவர்கள் மீண்டும் ரோமுக்குச் சென்று, தங்கள் வீட்டிலேயே ஒரு சபையை நடத்தினர்.

புறஜாதியாரிடையேயும் தேவன் மகத்தான விதத்தில் செயல்பட்டார். பாலியல் ஒழுக்கக்கேட்டில் வாழ்ந்தவர்கள், விக்கிரகாராதனையாளர்கள், திருடர்கள், குடிகாரர்கள் மற்றும் பிறரை வாயால் இழிவுபடுத்தியவர்கள் ஆகியோரும் விசுவாசிகளானார்கள் (1 கொரி. 6:9-11). ஜெப ஆலயத்திற்கு அருகிலிருந்த வீட்டின் உரிமையாளரான யுஸ்துவும், ஸ்தேவானும், அவருடைய குடும்பத்தினரும், முக்கியத் தலைவர்களில் ஒருவரான காயுவும் கொரிந்து சபையின் குறிப்பிடத்தக்க உறுப்பினர்களாக இருந்தனர். பவுலின் கடிதங்கள், கொரிந்து சபை ஆவிக்குரிய வரங்களால் நிறைந்திருந்தாலும், ஆழமான பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்ததை வெளிப்படுத்துகின்றன. அவர்களின் பிரச்சினைகளைச் சரிசெய்வதற்காக பவுல் முதலாம் கொரிந்தியர் நிருபத்தை, சுமார் கி.பி. 53-55 காலத்தில் எழுதியிருக்கலாம். சபை பவுலின் அறிவுரைகளுக்கு குறைந்தபட்சம் ஓரளவு செவிசாய்த்ததாகத் தெரிகிறது.

பின்னர் பவுல் இரண்டாம் கொரிந்தியர் நிருபத்தை, சுமார் கி.பி. 55-56 காலத்தில் எழுதியிருக்கலாம். அதில் சமரசம், மீட்டெடுத்தல், தாராள மனப்பான்மை மற்றும் மீண்டும் இணைந்து செயல்படுதல் ஆகியவற்றைப் பற்றி பேசுகிறார். பவுல் ரோமர் நிருபத்தை, சுமார் கி.பி. 56இல் கொரிந்துவிலிருந்து எழுதியபோது, கொரிந்து கிறிஸ்தவ சமூகம் போதுமான அளவு நிலைபெற்றிருந்தது. எனவே, தான் எழுதிக்கொண்டிருந்த இடமாக கொரிந்துவை அவர் குறிப்பிட முடிந்தது.

அப்போஸ்தலர்களின் காலத்திற்குப் பின்னரும் கொரிந்துவில் கிறிஸ்தவம் தொடர்ந்து இருந்தது. ரோமிலிருந்து கொரிந்து சபைக்கு சுமார் கி.பி. 96இல் எழுதப்பட்ட முதலாம் கிளமெண்ட் நிருபம், பவுலின் காலத்திலிருந்து சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகும் கொரிந்து சபை செயல்பட்டுக்கொண்டிருந்ததை உறுதிப்படுத்துகிறது. ரோமப் பேரரசின் காலத்தில், பேரரசின் பிற பகுதிகளில் இருந்த கிறிஸ்தவர்களைப் போலவே, கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்களும் அவ்வப்போது துன்புறுத்தல்களைச் சந்தித்தனர். கொரிந்துவுடன் தொடர்புடைய பிற்காலத்தில் மிகவும் பிரபலமான தியாகி லியோனாஸ் (லியோனிடாஸ்) ஆவார். அவரும் அவருடைய தோழர்களும் கி.பி. 3ஆம் நூற்றாண்டில் பேரரசர் டெசியஸின் காலத்தில் ஏற்பட்ட துன்புறுத்தலுடன் பாரம்பரியமாகத் தொடர்புபடுத்தப்படுகின்றனர். இருந்தபோதிலும், சபை தொடர்ந்து நிலைத்திருந்தது. கொரிந்து ஒரு முக்கியமான ஆயர் தலைமையிடமாக தொடர்ந்து விளங்கியது.

### நாம் கற்றுக்கொள்வது என்ன?

நாம் எதிர்கொள்ளும் தற்போதைய சூழ்நிலைகளால் துவண்டு போகக்கூடாது. தேவன் பல நேரங்களில் மிகச் சிறிய வாய்ப்பின் கதவைத் திறந்து, தமது சபையை நிறுவ நம்மைப் பயன்படுத்துகிறார். ஒழுக்கக்கேடும், பேராசையும் வீசிய காற்றுகள் கொரிந்துவிலிருந்த அந்தப் பலவீனமான சபையை எளிதில் அணைத்திருக்க முடியும். ஆனால் தேவன் அவ்வாறு நடக்க அனுமதிக்கவில்லை. அதேபோல, பவுலைப் போல நாம் முழுமையாக தேவனைச் சார்ந்திருந்தால், நம்முடைய முயற்சிகளையும் அவர் ஆசீர்வதிப்பார்.

-4ஆம் பக்கத் தொடர்ச்சி

**மோசேயின் தரிசனம் மூன்று முக்கிய அம்சங்களை உள்ளடக்கியது:**

1. பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம். பிள்ளைகளால் நிரப்பப்படுதல், சகோதரர்களாலும், சமூகத்தாலும் அங்கீகரிக்கப்படுதல் ஆகிய குடும்ப ஆசீர்வாதம்.
2. காலை எண்ணெயில் தோய்த்தல் என்பது மிகுதியான ஒலிவ அறுவடையைக் குறிக்கிறது. அது தலையில் பூசிக்கொள்ள மட்டுமல்ல, தன் பாதங்களையும் அதில் கழுவிக்கொள்ளும் அளவிற்கு ஒலிவ எண்ணெயின் (Golden Oil) மிகுதியை அறிவிக்கிறது. தீருவுக்கும், கர்மேலுக்கும் இடையேயான 20 மைல் நீளமும், 9 மைல் அகலமும் கொண்ட ஆசோன் நிலப்பகுதி, ஒலிவ எண்ணெயின் பிரதான ஆதாரமாக கொழுத்த பள்ளத்தாக்காக மாறியது.
3. ஆசேரின் நிலப்பகுதி, கானானின் வட எல்லையாக அமைந்திருந்ததால், எதிராளிகளிடமிருந்து அடிக்கடி வரும் நெருக்கடிகளைச் சமாளிக்க கர்த்தர் அவர்களுக்கு இரும்பும், வெண்கலமுமான பாதரட்சைகளைக் கொடுத்தது மட்டுமல்லாமல், அன்னாளைப் போன்று அன்றாட வாழ்வில் சாட்சியாக வாழ்வதற்கு தேவையான பெலனையும் கொடுத்தார்.

இவ்வாறு குடும்ப ஆசீர்வாதம், ஆஸ்திகளைக் குறித்த ஆசீர்வாதம், அன்றாட பெலனுக்கான ஆசீர்வாதம் ஆகிய பூரண ஆசீர்வாதங்களை ஆசேரியர்கள் பெற்றிருந்தனர்.

**முடிவு:**

மகிழ்ச்சியும், திருப்தியும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையது. அதை நாம் வெளி உலகில் தேடிச் சென்று அடைய முடியாது. அது நம் இருதயத்தின் ஆழத்தின் உள்ளே அமைதியாக வாழ்கிறது. மகிழ்ச்சியானது நன்றியுணர்வில் தொடங்கி திருப்தியுணர்வின் வெகுமதியாக வெளிப்படுகிறது என்று ஆய்வுக் கட்டுரைகள் கூறுகின்றது. ஆசீர்வாதத்தின் மிகுதியால் நிறைப்பப்பட்டிருந்த ஆசேர் கோத்திரத்தார் ராஜாக்களுக்கு வேண்டிய ருசி வர்க்கங்களைக் கொடுத்தார்கள். “என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே என் போஜனமாயிருக்கிறது” (யோவான் 4:34). Where there is food there is love. ஆம் ராஜாவிற்கு வேண்டிய போஜனத்தை அளிப்பதற்கு ஆண்டவர் நம்மை அழைக்கிறார். மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பதற்காகவே நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வோடு, “இந்த சிறியரில் ஒருவருக்கு எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்” என்ற இயேசு கூறிய வார்த்தைகளை நிறைவேற்ற முயல்வோம். இருப்பதில் திருப்தி, கொடுப்பதில் மகிழ்ச்சி என்ற மனநிலையைப் பெறுவோம். ஆசீர்வாதம் என்பது செழிப்பைப் பற்றியதல்ல; அது மனநிறைவு என்ற நோக்கத்தைப் பற்றியது என்ற சாட்சியை நமது வாழ்வின் மூலம் உலகிற்கு பகிர்வோம்.

**போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். (1 தீமோத்தேயு 6:6)**



# வாலிபர் பிரிவு ஊழியத்தின் ஆசீர்வாதங்கள்







## YOUTH OUTREACH MINISTRY

FMPBஇன் இளைஞர் ஜெபக்குழுவான நாங்கள் நன்கு பழக்கமான சூழலைத் தாண்டி, கொருக்குப்பேட்டை தெருக்களுக்குள் சென்று ஊழியம் செய்யும் அரிய வாய்ப்பை தேவனால் பெற்றோம்.

கொருக்குப்பேட்டை சமூகம் மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் ஒரு பகுதியாகும். அங்கு பாலியல் தொழிலில் ஈடுபடும் பல பெண்கள் வாழ்கின்றனர். போதைப்பொருள் விநியோகத்தின் தாக்கமும் அப்பகுதியில் காணப்படுகிறது. இத்தகைய சூழ்நிலைகள் அங்கு வாழும் பலரின் வாழ்க்கையில் வேதனையையும், சிக்கல்களையும் ஏற்படுத்தியுள்ளது. நாங்கள் ஆராதனை செய்து தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்ட இடம் மிகவும் சிறியதாகவும், எளிமையானதாகவும் இருந்தது. ஆனால், இவர்களின் வாழ்க்கையை மாற்றுவதற்கு பெரிய கட்டிடம் தேவையில்லை, இவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்ற வாஞ்சையிருந்தால் போதும் என்ற மிகப் பெரிய ஒரு உண்மையைத் தேவன் எங்களுக்கு நினைப்பூட்டியதால், சந்தோஷத்தோடு சுவிசேஷத்தை பிரசங்கித்தோம். தேவன் உண்மையான ஊழியம் எப்படிப்பட்டது என்பதை எங்களுக்குக் கற்றுக்கொடுத்தார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

-FMPB வாலிபர் ஜெபக்குழு, பம்மல்

பெரியமலை சுவிசேஷ ஊழியம்




கொருக்குப்பேட்டை



HANDLE WITH CARE

## RIGHT FOUNDATION

# பரிசுத்தம்... காத்துக்கொள்வோம்

COUNSELLING PART - விவாகக் களம்

MRS. VASANTHI EMMANUEL

BUILD ON THE

திருமணம் என்பது தேவனால் நியமிக்கப்பட்ட ஒன்று. திருமணம் வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்க வேண்டிய ஓர் உறவு.

Marriage is not a contract but it's a covenant.

தேவன் நம்மை உலகத் தோற்றத்திற்கு முன்பே தெரிந்து கொண்டிருக்கிறார் (எபே. 1:4). நமது வாழ்க்கை ஓட்டத்தை அவர் நியமித்திருக்கிறார் (எபி. 12:1). நமது தலைமயிரையெல்லாம் எண்ணி வைத்திருக்கிறார். நம்முடைய வாழ்க்கைத் துணையையும் நமக்கு நியமித்து வைத்துள்ளார் (மத். 10:30). தேவனுடைய வழியில் செல்லாமல், குறுக்கு வழியில் செல்பவர்கள் அதன் விளைவைச் சந்திக்க நேரிடும். எனவே கடவுளின் சித்தத்திற்கு காத்திருந்து சரியான நேரத்தில் அவர் கொடுப்பதைச் சந்தோஷத்துடன் பெற்றுக்கொள்ளும் போது திருமண வாழ்வு ஆனந்தமாக, ஆசீர்வாதமானதாக அமையும். திருமணத்திற்கு முன் உறவு கொள்ளத் துடிப்பது மோகம். நண்பர்கள் என்று அளவுக்கு மீறி அவர்களுடன் பழகி, தன் கற்பைப் பறி கொடுத்த தீனாளைப் போன்ற பல பெண்கள் உண்டு. மயக்க மருந்துகளால் கற்பை பறிகொடுத்து விபச்சார விடுதியில் சேர்க்கப்பட்டவர்கள் பலர். HIV, AIDSஆல் பாதிக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் இன்று அதிகமாக உள்ளனர். கர்நாடக மாநிலத்தில் ஏழாயிரம் வாலிபர்கள் HIVஆல் பாதிக்கப்பட்டதைக் கேள்விப்படும்போது வாலிபர்களாகிய நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். திருமணம் வரை தூய்மையைக் காத்துக் கொள்வது மிகவும் அவசியம். காதலுக்கு முக்கியத்துவம் தராமல், ஜெபத்துடன் வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுப்பது மிகவும் சிறந்தது.

ஓரினச் சேர்க்கை இயற்கையானது, நியாயமானது எனப் பலவிதமாக கூறுவோர் இருக்கின்ற இந்நாட்களில் வேதத்தின் அடிப்படையில் அவர்களை நாம் சந்திக்க வேண்டும். ஓரினச் சேர்க்கை இயற்கைக்கு மாறானது (லேவி. 18:22). வேதம் அதனை வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும் அதற்கு மரண தண்டனையும் விதிக்கிறது (லேவி. 20:13). அதில் ஈடுபடுபவர்களை இழிவான செயல்களுக்கு ஒப்புக்கொடுத்தார் என ரோமர் 1:26-28இல் பார்க்கிறோம். இவர்கள் தேவனுடைய அரசுக்குள் வர முடியாது (1 கொரி. 6:9, 10). இவர்களின் முடிவு நரகம். மிருகத்துடன் அசுத்தமாக நடப்பதையும் தேவன் வெறுக்கிறார் (யாத். 22:19, லேவி.18:23, 20:15, 16).

இன்றைக்கு சத்துரு வஞ்சிக்கும் மற்றொன்று தான் LIVING TOGETHER என்ற மணவாழ்விற்கு முன்பே இணைந்து வாழ்வு நடத்தும் முறை, கவனமாயிருங்கள். இதுவும் தேவன் அருவருக்கும் அசுத்தம்.

பரிசுத்தத்தை நேசிக்கும் தேவன்... நான் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்கிறார். வாலிபத்தில் பரிசுத்தத்தை காத்துக்கொண்டால், திருமண வாழ்வில் எந்த மனசாட்சியும் உறுத்தாமல் நிம்மதியான ஒரு வாழ்வைத் தொடரலாம். எனவே தேவன் தரும் வரை காத்திருந்து சரியான வாழ்க்கைத் துணையைப் பெற்று அனுபவியுங்கள். இதை மீறி திருமணத்திற்கு முன் உறவு கொண்டவர்களின் மனசாட்சி உறுத்திக்கொண்டேயிருக்கும். எனவே உங்கள் சரீரத்தைக் கெடுக்காமல் கவனமாக இருங்கள்.

யோசேப்பு நமக்கு ஒரு முன்மாதிரியாக உள்ளார் (ஆதி. 39:6, 12). தேவன் என்னோடிருந்து, என்னைக் காண்கிறார் என்ற உணர்வுடன் தேவ பிரசன்னத்தில் வாழ்ந்து, வரும் சோதனைகளில் வெற்றி பெறுங்கள். எந்தப் பாவமான காரியங்களிலும், சாத்தானை எதிர்த்து நிற்க வேண்டும். ஆனால் பாலியல் பாவத்திற்கு விலகி ஓட வேண்டும் (2 தீமோ. 2:22). (DON'T FIGHT BUT FLIGHT). நமது சரீரத்தில் தேவன் வாசமாயிருக்கிறார் என்பதால் சரீரத்தைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ளுங்கள்.

'தேவன் நம்மை பரிசுத்தத்திற்கு அழைத்திருக்கிறார்' (1 தெச. 4:7). எனவே இப்படிப்பட்ட பாவங்களில் விழுந்திருந்தால், அந்த பாவங்களை உடனடியாக நிறுத்துங்கள். தவறான உறவுகளை உதறித்தள்ளுங்கள். தீய நண்பர்களை விட்டு வெளியே வாருங்கள். மனந்திரும்பி பாவத்தை அறிக்கையிடுங்கள். விசுவாசத்துடன் மன்னிப்பைப் பெற்று பரிசுத்தமாக வாழுங்கள். பரிசுத்த தேவன் உங்கள் வாழ்வில் அற்புதங்களைச் செய்வார். நீங்கள் எதிர்பார்த்திருக்கும் நன்மையை உங்களுக்கு தருவார். சோர்ந்து போக வேண்டாம். விசுவாசத்தில் உறுதியாயிருங்கள்.

*அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ளஆராதனை. (ரோமர் 12:1)*

# பத்து கன்னியர்

REV. K. KINGSLEY JOHN



### அறிமுகம்:

தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி இயேசு கிறிஸ்து பல உவமைகளின் மூலம் மக்களுக்கு போதித்தார். அவற்றில் மிகவும் ஆழமானதும், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு நேரடியாக சவால் விடுவதுமான ஒரு உவமைதான் பத்து கன்னியர் உவமை. மத்தேயு 25:1-13இல் இந்த உவமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கு இயேசு "பரலோக ராஜ்யம்" என்று கூறி இந்த உவமையை ஆரம்பிக்கிறார். எனவே இது ஒரு திருமணத்தைப் பற்றிய உவமை மட்டுமல்ல; தேவனுடைய ராஜ்யத்தில் வாழ்கிறவர்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும் என்பதைக் குறித்து இயேசு கொடுக்கும் ஆவிக்குரிய செய்தியாகும்.

### 1. ராஜ்ய களம் – அழைப்பின் களம்:

பத்து கன்னியர்களும் மணவாளனை எதிர்கொள்ள அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் அனைவரும் விளக்குகளை எடுத்துக்கொண்டு மணவாளனுக்காகக் காத்திருந்தார்கள். இது தேவனுடைய ராஜ்யத்திற்கான அழைப்பு அனைவருக்கும் வழங்கப்படுகிறது என்பதைக் காட்டுகிறது. ஆனால் அழைக்கப்படுவது மட்டும் போதாது, அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ற வாழ்க்கையை வாழ வேண்டும். ராஜ்யத்தில் அழைக்கப்படுவது கிருபை. அழைப்பிற்கேற்ற வாழ்க்கை வாழ்வது நமது பொறுப்பு.

### 2. ராஜ்ய களம் – ஆயத்தத்தின் களம்:

ஐந்து கன்னியர்கள் புத்தியுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்கள் விளக்குகளோடு எண்ணெயையும் எடுத்துக்கொண்டார்கள். மற்ற ஐந்து பேர் விளக்குகளை மட்டும் எடுத்துக்கொண்டார்கள். மணவாளன் தாமதித்தபோதும் புத்தியுள்ளவர்கள் தங்கள் ஆயத்தத்தை இழக்கவில்லை. இதன் மூலம் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்கிறோம். எண்ணெய் இல்லாத விளக்கு எரியாது. அதேபோல் தேவனோடு உறவு இல்லாத வெளிப்புற பக்தி நிலைத்திருக்காது.

### நமது ஆயத்தம்:

- ஜெபத்தில் இருக்க வேண்டும்.
- தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருக்க வேண்டும்.
- பரிசுத்தமாக வாழ வேண்டும்.
- விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும்.
- கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டும்.

ராஜ்ய களத்தில் கடைசி நேர ஆயத்தம் அல்ல; தினசரி ஆயத்தமே முக்கியம்.

### 3. ராஜ்ய களம் – விழிப்பின் களம்:

நள்ளிரவில் "இதோ மணவாளன் வருகிறார்" என்ற சத்தம் கேட்டது. அப்போது புத்தியுள்ள கன்னியர்கள் ஆயத்தமாக இருந்தார்கள். அவர்கள் மணவாளனோடு திருமண விருந்திற்குள் சென்றார்கள். பின்னர் கதவு அடைக்கப்பட்டது. இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை நமக்கு நினைவுபடுத்துகிறது. அவர் எப்போது வருவார் என்பதை நாம் அறியோம். ஆகவே ஒவ்வொரு நாளும் விழிப்புடன் வாழ வேண்டும். "ஆகையால், விழித்திருங்கள்" மத்தேயு 25:13.

### விழிப்புடன் இருப்பது என்பது:

- கிறிஸ்துவை மறக்காமல் இருப்பது.
- பாவத்தை விட்டு விலகுவது.
- ஜெபத்தில் நிலைத்திருப்பது.
- விசுவாசத்தைக் காத்துக்கொள்வது.
- ஆண்டவருடைய வருகைக்காக ஆயத்தமாக இருப்பது.

கதவு அடைக்கப்படுவதற்கு முன் ஆயத்தமாக இருப்பதே ராஜ்ய களத்தின் ஞானம்.

### முடிவுரை:

பத்து கன்னியர்களும் ஒரே அழைப்பைப் பெற்றார்கள். ஆனால் அனைவரும் ஒரே ஆயத்தத்துடன் இருக்கவில்லை. எனவே ராஜ்ய களத்தில் நமது வாழ்க்கை மூன்று காரியங்களை வெளிப்படுத்த வேண்டும்.

1. அழைப்பை ஏற்றுக்கொள்.
2. ஆயத்தமாக இரு.
3. விழித்திரு.

மணவாளன் வருகிறார்! நாம் அவரைச் சந்திக்க ஆயத்தமாக இருப்போம்.



# கனம் பொருந்திய பேலிக்ஸ்

இருண்ட சரித்திரத்தை எதிரொலிக்கும்
இருள் நிறைந்த பேலிக்ஸின் பிறப்பு!
'அடிமை' – ஆளுநராக உயர்ந்த அற்புதம்,
அத்திப்பூத்த 'அதிசயம்' அகிலம் வியந்தது.

செனட் சபை தலைமிதித்து செங்கோல்
உயர்த்தியவன்,
செத்த கிரியைகளுக்கு உயிர்கொடுத்து தீமை
வளர்த்தவன்;
உண்மையின் உத்தமத்தைக் கொலை செய்து,
ஊழல் விருட்சங்களுக்கு உயர்வு
கொடுத்தவன்.

உண்மையில்லா கட்டுக்கதைக்கு பலவர்ண
ஆடை உடுத்தி,
மாற்றுக் குரல் கொடுத்தால் மரணத்தைப்
பரிசாக்கி,
மாயச் சூழ்ச்சியாலே மனித உயிரை
விலைபேசி,
அடக்குமுறை வேள்விக்கு பணமுதலைக்கு
வேலியானான்.

அதிகாரத் துஷ்பிரயோகம்; அகம்பாவ
அடக்குமுறை,
அர்த்தமில்லா கிளர்ச்சிகளை ஆழமாய்
வளர்த்தவன்,
அரசியல் தந்திரமும் அடங்காத பணாசையும் –
இவரது
அகங்கார மமதைக்கு சிவப்புக் கம்பளம்
விரித்தது!

விடுதலை வீரர்களின் சுதந்திர தாகத்தைக்
கழுவேற்றியவன்,
வீணராகவும் வீதிக்கொள்ளைக்காரராகவும்
விளம்பரம் செய்து,
வீரன் எலியேசருக்குத் தந்திரமாய் தூது
அனுப்பி,
விசாரணையின்றிச் சிலுவைக்கு விருந்து
படைத்தவன்!

பிரதான ஆசாரியன் யோனதானின்
பெருங்குரலுக்குப் பயந்தவன்,
சில்லரை விரும்பி சிக்காரியரால்
ஆணவக்கொலை செய்வித்தவன்;
கேட்டது கிட்டுவதற்குத் தந்திரங்கள் புரியும்
அரசியல் சூத்திரதாரி,
கிஞ்சித்தும் லஞ்சம் தராப் பவுலைக்
கொள்ளைநோயெனப் பரிகசித்தவன்!

வன்முறை விதைகளை மண்ணுக்குள்ளே
தூவினான்!
அநியாயம் விதைத்தவன் அமைதியை
அறுப்பானா?
விதியின் சக்கரம் யாருக்காகவும் நிற்காது,
விரும்பிய அதிகாரம் என்றும் கையில் நில்லாது!

ஈனப் பிறப்பெடுத்தும் இறுமாப்பில்
வாழ்ந்தவன்,
ஈடேற வழியின்றி வரலாற்றில் தோற்றவன்;
மானம் இழந்து, வெறும் மண்ணில் தளர்ந்து
கெட்டவன்,
காலம் பழிதூற்றும் கண்ணீரில் வீழ்ந்தவன்!

# அல்பேயுவின் குமாரனாகிய
# யாக்கோபு

– ஒருநீக் களம் REV. PRABAKARA SARATHY

**அறிமுகம்:**

*மத்தேயு 10:2-3 வரையிலான வேதப் பகுதி, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, இயேசுவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர் என்றும், புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள "யாக்கோபு" என்ற பெயர் கொண்ட மூன்று நபர்களில் ஒருவர் என்றும் பதிவு செய்கிறது. அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, "சின்ன யாக்கோபு" (மாற்கு 15:40) என்றும் அழைக்கப்படுகிறார்.*

*பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஏற்கனவே மற்றொரு யாக்கோபு (செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு) இருந்ததால், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபை "சின்ன யாக்கோபு" என்று அழைப்பது பொருத்தமாக இருந்தது. "சின்ன" என்ற சொல்லை "சிறியவர்" அல்லது "இளையவர்" என்று புரிந்து கொள்ள வேண்டும். யாக்கோபின் தாய், இயேசுவின் தாயாரின் சகோதரி என்ற அடிப்படையில், அல்பேயுவின் மகனான யாக்கோபு இயேசுவின் முதன்மை மைத்துனராக (First Cousin) இருந்தார் என்று வரலாறு கூறுகிறது.*

**அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபின் ஊழியம்:**

*புதிய ஏற்பாட்டில் இவர் நான்கு முறை மட்டுமே தோன்றுகிறார்; அதுவும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் பட்டியலில் மட்டுமே வருகிறது. சில பாரம்பரியங்கள் சின்ன யாக்கோபு பெர்சியா மற்றும் எகிப்தில் ஊழியம் செய்தார் என்று கூறுகின்றன, ஆனால் இவை இன்னும் குறைந்த நம்பகத்தன்மை கொண்டவையாகத் தோன்றுகின்றன.*

**1. அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சீடராக இருந்தார் (மத்தேயு 10:1).** *தனது ஆண்டவர் எதைச் செய்ய அவரை ஆயத்தப்படுத்தினாரோ, அதை அவர் செய்தார்:*

- *தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் (வசனம் 7).*
- *கிறிஸ்துவின் நாமத்தில் பெரிய காரியங்களைச் செய்தார் (மத்தேயு 10:1; 2 கொரிந்தியர் 12:12).*
- *வியாதிகளையுடையவர்களைக் குணமாக்கினார் (வசனம் 8).*
- *குஷ்டரோகிகளைச் சுத்தமாக்கினார் (வசனம் 8).*
- *மரித்தோரை எழுப்பினார் (வசனம் 8).*
- *பிசாசுகளைத் துரத்தினார் (வசனம் 8).*
- *அவர் துன்புறுத்தப்பட்டார் (வசனம் 22).*
- *எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் ஒரு ஊழியக்காரனாக இருந்தார் (வசனம் 25).*

**2. அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு இயேசு கிறிஸ்துவின் உண்மையுள்ள மற்றும் கீழ்ப்படிதலுள்ள ஊழியக்காரராக இருந்தார் (அப்போஸ்தலர் 1:13).**

- *அவர் நிருபங்கள் எதையும் எழுதவில்லை (பவுலைப் போல).*
- *அவர் புகழ்பெற்ற பிரசங்கங்கள் எதையும் செய்யவில்லை (பேதுருவைப் போல).*
- *நமக்குத் தெரிந்தவரை அவர் எந்தச் சபையையும் நிறுவவில்லை, எந்தப் பெரிய சபைக்கும் போதகராக இருக்கவில்லை.*
- *சிறிய காரியங்களிலும் உண்மையுள்ளவராக இருந்தார்.*
- *மரணம் வரை உண்மையுள்ளவராக இருந்தார்.*
- *அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, பேதுரு அல்லது யோவானின் அளவுக்குப் புகழ்பெற்ற அந்தஸ்தைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் மக்கள் அவரைக் கண்டபோது, அவர்களுக்கு முதலில் இயேசுவே நினைவுக்கு வந்தார்.*

**அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபின் ஊழியமும், அவரது வாழ்க்கையிலிருந்து நாம் கற்கும் பாடங்களும்:**

*அவரது தனிப்பட்ட ஊழியத்தைப் பற்றிய சில குறிப்பிட்ட விவரங்களை மட்டுமே புதிய ஏற்பாடு பதிவு செய்கிறது. கிழக்கு மற்றும் மேலைநாட்டு திருச்சபை பாரம்பரியங்களின்படி, பரிசுத்த ஆவியானவரின் வருகைக்குப் பிறகு, யாக்கோபு, யூதேயா உள்ளிட்ட பகுதிகளில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார், பின்னர் பெர்சியா, எகிப்து அல்லது மத்திய தரைக்கடல் சுற்றியுள்ள பகுதிகளுக்கு மிஷனெரிப் பயணங்களை மேற்கொண்டார். ஆரம்பகால திருச்சபைக் குறிப்புகள், ஆரம்பகால சுவிசேஷப் பணியிலும், கிறிஸ்தவ சமூகத்தின் அடித்தள வளர்ச்சிப் பணியிலும் இவர் பங்கேற்றார் என்பதைக் குறிப்பிடுகிறது.*

**அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபின் மரணம்:**

*பாரம்பரியத்தின்படி, சின்ன யாக்கோபு பெர்சியாவிற்கு (தற்போதைய ஈரான்) சுவிசேஷத்தைக் கொண்டு சென்று அங்கு இரத்த சாட்சியாக (Martyr) மரித்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. எருசலேமில் பிரசங்கித்தபோது, கோபமடைந்த யூதர்களால் அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு கல்லெறிந்து கொல்லப்பட்டு, தேவாலயத்திற்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டார் என்று பல குறிப்புகள் விவரிக்கின்றன. அவரது மரணத்தைப் பற்றிய பாரம்பரியக் கணக்குகள் மாறுபடுகின்றன; சிலர் அவர் எகிப்தில் சிலுவையில் அறையப்பட்டு இரத்த சாட்சியானார் என்று நம்புகிறார்கள். மற்ற பாரம்பரியங்கள் அவர் எருசலேமில் உள்ள தேவாலயத்தின் உச்சியிலிருந்து கீழே தள்ளப்பட்டு, கி.பி. 62இல் அடித்துக் கொல்லப்பட்டார் என்று கூறுகின்றன.*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிற்கான ஒரு சவாலின் குரல்:**

*வாலிப பிள்ளைகளே, FMPB கலாச்சாரங்களைக் கடந்த ஊழியத்திற்காக அமைதியான, துடிப்பான மற்றும் கிறிஸ்துவைப் போன்ற தலைமைத்துவ வேட்பாளர்களை எதிர்நோக்குகிறது. வட இந்தியாவில் ஊழியம் செய்வது ஒரு சவால்தான், ஆனால் இயேசுவைப் போல வாழ்வதும், இயேசுவின் குணங்களை வெளிப்படுத்துவதும் மிக முக்கியமான காரியங்களாகும்.*

*இயேசு கிறிஸ்துவின் அன்பைக் காட்ட நீங்கள் மனமுள்ளவர்களாக இருப்பீர்களானால், எங்களோடு இணைந்து, இயேசு கிறிஸ்துவின் அன்பைக் காட்டி உலகத்தை மாற்றும் சவாலாகத் திகழுங்கள்.*

**"அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்"**




C.S.I. திருநெல்வேலி திருமண்டலமும்
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, தென்மண்டலமும்
இணைந்து வழங்கும்
மிஷன் எக்ஸ்போ
நெல்லை 2026
திருநெல்வேலி, தென் தமிழக திருச்சபையின் வரலாறு மற்றும்
அருட்பணியாளர்களின் வாழ்க்கை சரித்திரத்தை சித்தரிக்கும்
மாபெரும் ஒலி ஒளி மிஷனெரி தரிசன கண்காட்சி
தலைமை
Rt. Rev. Dr. A.R.G.S.T. பர்னபாஸ் அவர்கள்,
பேராயர், சி. எஸ். ஐ. திருநெல்வேலி திருமண்டலம்
காட்சியை தொகுத்து வழங்குபவர்
திரு. V. நவநீதர், ஓவியர் அவர்கள்,
சுவிசேஷ ரதம், FMPB, சென்னை
இடம்
C.S.I. திருமண்டல தரிசனபூமி,
டக்கரம்மாள்புரம், நெல்லை
கருப்பொருள்:
பூர்வநாட்களை நினை
உபாகமம் 32:7
நாள்
அக்டோபர், 2026
1 | 2 | 3 | 4 | 5
6 | 7 | 8 | 9
வியாழன் முதல் வெள்ளி வரை
நேரம்
தினமும்
காலை 10:00 முதல்
மாலை 09:00 வரை
தினமும் மாலை 6:00 மணி
அனுமதி இலவசம்
ஒலி ஒளி நாடகம்


friends missionary prayer band
IGNITE YOUR FAITH.
FIND YOUR VOICE.
FUEL YOUR PURPOSE
செங்குன்றம், காரனோடை,
புழல் & காவாங்கரை
Youth
RETREAT '26
தேவ செய்தியாளர்
Rev M. ராஜ் NPN Chennai
ஜெப கரிசனை
Rev G. கிங்ஸ்லி
பணித்தளச் செய்தி
Sis. ஷிபா ஜாஸ்மின் பரதன்
(Maharashtra)
நடத்துபவர்
Sis. ஷீலா டேனியல்
14TH SEPTEMBER
Government Holiday
Monday
09:30 Am to 04:00 PM
ECI St. Paul's Church
Redhills, Chennai - 52
CONTACT FMPB: 99520 05188 / 90032 04202


"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்:16:15)
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு (FMPB)
அருமனை பணி மாவட்ட
வாலிபர் முகாம்
போ அல்லது அனுப்பு
இடம்:
LM பாஸ்டரேட் சபை,
(பனிச்சவிளை, அருமனை)
நாள்:
04-09-2026
வெள்ளிக்கிழமை
நேரம்:
காலை 9.30 மணி முதல்
மாலை 4.00 மணி வரை
தலைமை : Rev. S. ஜெபராஜ், B.Th., B.D. சபைபோதகர்
சிறப்பு செய்தியாளர்கள்: Rev. இம்மானுவேல் ரெஞ்சித்சிங்
(FMPB Over Seas Desk, Chennai)
Rev. டேனியல் அருள்மணி
(FMPB தமிழ்நாடு இளைஞர் பிரிவு செயலாளர்)
பாடல் : FMPB குழுவினர்
செவிக்கினிய பாடல்கள், சிந்தனை யூட்டும் தேவச்செய்திகள், இளைஞனே கருந்துவா,
யுவதியே நீயும் வா, இது ஒரு நல்ல தருணம் வாய்ப்பினை நழுவ விடாதீர்..
இவண், FMPB
அருமனை பணி மாவட்டம்.
குறிப்பு : தேனீர், மதிய உணவு வழங்கப்படும்.
7598740532; 9443681992; 8807999844


Friends Missionary Prayer Band
NTN-5 Region - Chennai
(Arumbakkam,Egmore,Choolaimedu & Kodambakkam)
YOUTH & TEENS
MEET
MESSAGE : REV. CRESENCE VENKATESH
FMPB
Theme
I call you by name, you are mine.
Isaiah 43:1
Missionary sharing : Sis. Beulah Barnabas
Venue : MCC School , Harrington Road,
Chetpet,Chennai 600031.
Date : Monday, 14.09.2026
Time : 09.30 am to 04.30 pm
WORSHIP, PRAYER, SHARING , GAMES
Contact : 9443418866/9600025288/9841775932/ 9444480164/8825641373
FMPB - No 36/1, Thiruvalluvar puram 2nd Street ,Choolaimedu,Chennai 600 094


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
விருதுநகர் மாவட்டம்
வாலிபர் - 2026
கூடுகை
பேர் சொல்லி அழைப்பவர்
ஏசாயா 43:1
QARA
நாள்
2 2026
அக்டோபர்
9 AM - 4 PM
இடம்
YMCA வளாகம்
விருதுநகர்
ஜெபியுங்கள்!
பங்குபெறுங்கள்!!


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
— வேலூர் மாவட்டம் —
வாலிபர்
கூடுகை
2026
பதிவு
₹ 10/-
மட்டும்
(மதிய உணவு மற்றும் தேநீர் உண்டு)
கருப்பொருள் :
விடுவித்துக் கொள்
சகரியா 2:7
நாள் :
02 அக்டோபர் 2026,
வெள்ளிக்கிழமை
நேரம் :
காலை 9.30 -
மாலை 4.30
இடம் :
CSI கிறிஸ்து நாதர் ஆலயம்,
காந்திநகர், வேலூர் -6
தலைமை :
அருட்திரு. ஜேரட் அருள் ஜெபருபன்
ஆயர், CSI கிறிஸ்து நாதர் ஆலயம், காந்திநகர், வேலூர் - 6.
அருட்திரு.
செய்தி :
இம்மானுவேல் ரஞ்சித்சிங்
திருமதி. வசந்தி இம்மானுவேல்
சென்னை.
பணித்தளப் பகிர்வு :
அருட்திரு. பரணிதரன்
திருமதி. செல்வராணி
மகாராஷ்டிரா
சிறப்பம்சங்கள்
பீல் இன மக்களின் கலாச்சார நடனம்
ஆராதனை வேளை
செய்திகள்
பணித்தளப் பகிர்வுகள்
வாலிபத்தம்பி தங்கைகள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்
அருட்திரு. R. எட்வின் செல்வராஜ், FMPB, வேலூர்.
திரு. சாம்பால், வாலிபர் பிரிவு, FMPB, வேலூர்.
திருமதி. ஏஞ்சலின் சுதாகர், வாலிபர் பிரிவு, FMPB, வேலூர்.
82923 90481
93619 56997
95008 34776